விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 286 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 14 திங்கட்கிழமை (30.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

வெளிநாடுகளுக்கான DHL பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கும் மிகக் குறைந்த கட்டணத்தில் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
TCN EXPRESS
208, GALLE ROAD, COLOMBO-6.
321, K.K.S.ROAD, JAFFNA.
MAIN STREET, MANNAR.
T.P: 0777 554528
(386)

## தமிழ்க் கட்சிகளை இன்று சந்திக்கிறார் சந்தோஸ் ஜா

(கொழும்பு)
இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா மற்றும் தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான முக்கிய சந்திப்பு இன்று கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெறவுள்ளது.

இச்சந்திப்புக்காக வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜாவுடன் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடல் 15

## யாழ்.சிறைச்சாலை கைதியொருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் கைதி ஒருவர் அவசர மருத்துவச் சிகிச்சைக்காக யாழ்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இராமநாதபுரம் வட்டக்கச்சிப் பகுதியைச் சேர்ந்த 42 வயதான கைதி ஒருவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். 15

### தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை
## திறந்த முழு மதிப்பெண் வழங்குவதென முடிவு

(கொழும்பு)
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாக்கள் வெளியாகியமை தொடர்பில் மீள் பரீட்சை நடத்துவதில்லை எனவும் குறித்த பகுதி ஒன்று வினாத்தாளில் வெளியாகிய மூன்று வினாக்களுக்கும் திறந்த முழுமதிப்பெண்களை வழங்குவதெனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. 15

## பாராளுமன்றத் தேர்தலில் பங்குகொள்வதில்லை
### தமிழ் மக்கள் பொதுச்சபை

(திருகோணமலை)
பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் பொதுச் சபை நேரடியாகப் பங்குகொள்ளாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்கள் பொதுச் சபையின் கூட்டம் நேற்றுத் திருகோணமலை உப்புவெளி 15

# ஒற்றுமைப்பட முடியாமல் அல்லாடுகிறது தமிழ் அரசியல்
## புதுப்புது அணிகள் களமிறங்கவும் வாய்ப்பு

**(யாழ்ப்பாணம்) எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழ் அரசியல் கட்சிகள் ஓரணியில் களமிறங்க முடியாமல் அல்லாடுவதாக அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவானதையடுத்து, பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரவின் இவ் அதிரடி நடவடிக்கையை அடுத்து, பொதுத் தேர்தலுக்கு அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றன.

எனினும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு தேர்தலை எதிர்கொள்ள முடியாமல் திணறுவதாகத் தெரிய வருகிறது.

தமிழ்த் தேசியக் கட்டமைப்பை இல்லாமல் செய்ததன் அடிப்படையில் தமிழ் அரசியலில் ஒற்றுமை குலைந்துள்ள நிலையில், தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் கூட்டமைப்பாக இயங்க ஆரம்பித்துள்ளன.


இந்நிலையில் பிரிந்து சென்றவர்களை மீளவும் ஒன்றிணையுமாறு இலங் 15

## முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக் குறித்து இன்று தீர்மானம்

(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் பிரமுகர்களுக்கான பாதுகாப்புக் குறித்து மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலொன்று இன்று நடைபெறவுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் 15


### தமிழரசுக் கட்சியின் அழைப்பை ஏற்க முடியாது
## விரும்பினால் தமிழரசுக் கட்சி எமது கூட்டமைப்பில் இணையலாம்



### சித்தார்த்தன் எம்.பி பகீர்

(வவுனியா)
கூட்டமைப்பில் வந்து சேருங்கள் எனத் தமிழரசுக் கட்சி விடுக்கின்ற அழைப்பை ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்தைப் பலப்படுத்தவும் நாங்கள் தருவதை நீங் 04

## சுமந்திரன் தலைமையில் ஒற்றுமைப்பட முடியாது
### சட்டத்தரணி சிறீகாந்தா



(வவுனியா)
சுமந்திரன் தலைமையிலான அணியுடன் ஒருபோதும், ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது என தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.சிறீகாந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சந்திப்பிலேயே அவ் 15

### கூட்டமைப்புடன் இணைவு
## பொதுக்கட்டமைப்புடன் பேசியே முடிவு - விக்னேஸ்வரன்

(கொழும்பு)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து போட்டியிடும் கோரிக்கை தொடர்பில் தமிழ்ப் பொதுக்கட்டமைப்புடன் பேசியே முடிவெடுக்க முடியும் எனத் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற தமிழரசுக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் 15

## வெதுப்பக உற்பத்திகளின் விலை மாறாது

(கொழும்பு)
முட்டையின் விலை குறைக்கப்பட்டாலும் முட்டை பயன்படும் வெதுப்பகம் சார் உற்பத்திகளின் விலையைக் குறைக்க முடியாது என அகில இலங்கை வெதுப்பக சங்கம் தெரிவித்துள்ளது. 15

## தேர்தலுக்கான நிதியை விடுவித்தார் ஜனாதிபதி

(கொழும்பு)
பாராளுமன்றத் தேர்தலுக்கான செலவுகளுக்காக 11 பில்லியன் ரூபாயை விடுவிக்கும் உத்தரவில் ஜனாதிபதி கையொப்பமிட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான ஆரம்பக்கட்டப் பணிகள் தொடர்பிலான கலந்துரையாடல்களின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராஜகிரியவில் உள்ள தேர்தல் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான (SOCKS) காலுறைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை நலன்புரிச் சங்கங்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:

**076 315 6470**

(C-1297)


## பலாலியில் விபத்து இளைஞன் உயிரிழப்பு

பலாலிச் சந்தியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மற்றுமொரு இளைஞர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். மோட்டார் சைக்கிளில் அதிவேகமாகச் சென்று பலாலிச் சந்தியில் மின்கம்பத்துடன் மோதியே விபத்து சம்பவித்துள்ளது.

சம்பவத்தில் பலாலிப் பகுதியைச்சேர்ந்த சாம்பசிவம் அபி (வயது18) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். சடலம் தெல்லிப்பழை வைத்தியசாலையில் உடற்கூற்று சோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. பலாலிப்பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## 19ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 1952 . 04 . 26



ஆண்டவன் அடியில் 2005 . 10 . 01

### அமரர் பொன்னுத்துரை சரவணபவன்

(ராசா - மண்டைதீவு)

[ திதி - அபரபக்க திரயோதசி ]

எந்தையே எமதன்புத் தந்தையே!
அன்பு மழை பொழிந்து, அருகிருந்து கதைபேசிய
அப்பாவே! எமை விட்டேசி ஆண்டு
பத்தொன்பது ஆனதுவே!
காலம் செய்த கோலத்தால் காலன் உமை
கவர்ந்தாலும், வாழும் வரை நின் நினைவில்
வாழ்ந்திடுவோம் அப்பாவே!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

15, குளம் கரை லேன்,
கொக்குவில்.

நீங்கா நினைவுடன்...
குடும்பத்தினர்.

(2157)

## சேவை நலன் பாராட்டு



### திரு.தெய்வகடாட்சம் புவனேந்திரன் (SLTAS - I)

ஆசிரிய ஆலோசகர் (விசேட கல்வி)

**சேவை விபரம்**

யா/கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்
ஆசிரியர் 23.11.1992 - 31.08.1993
யா/பொலிகண்டி இந்து த.க.பாடசாலை
ஆசிரியர் 01.09.1993 - 31.12.1996
யா/நாகர்கோவில் மகா வித்தியாலயம்
ஆசிரியர் 01.01.1997 - 30.06.2000
யா/மணற்காடு றோ.க.த.க.பாடசாலை
ஆசிரியர் 01.07.2000 - 09.01.2001
யா/கரவெட்டி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்
ஆசிரியர் 10.01.2001 - 30.11.2005
வலயக்கல்வி அலுவலகம் வடமராட்சி
ஆசிரிய ஆலோசகர் (விசேட கல்வி)
01.12.2005 - 30.09.2024

Best Wishes


வலயக்கல்வி அலுவலகம் வடமராட்சியில் ஆசிரிய ஆலோசகராகப் (விசேட கல்வி) பணியாற்றி 30.09.2024 இன்று ஓய்வு பெறும் திரு.தெய்வகடாட்சம் புவனேந்திரன் அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு ஓய்வுகாலத்தில் உடலாரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- ஊழியர் நலன்புரிச் சங்கம்
வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி.

(999)

## மரண அறிவித்தல்

பிறப்பு 16 - 09 - 1976



இறப்பு 29 - 09 - 2024

### கனகரத்தினம் வசீகரன்

மண்டைதீவு 8ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மண்டைதீவு 6ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் வசீகரன் அவர்கள் 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் கனகரத்தினம்(அமரர்) - அன்னலட்சுமி தம்பதியினரின் அன்புப் புதல்வனும் சரவணபவன் - இந்திராணி தம்பதியினரின் அன்பு மருமகனும் கபிலராணி(ஆசிரியை - மண்டைதீவு மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் வர்ஷாவின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான வளலாயைச் சேர்ந்த சுந்தரலிங்கம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், நேசரத்தினம் மற்றும் செல்லம்மா, கமலாதேவி, மண்டைதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், நாகராசா ஆகியோரின் பெறாமகனும் சிரோன்மணி, செல்லம்மா, பாக்கியலட்சுமி ஆகியோரின் மருமகனும் சிவகௌரி, ரஜனிகாந்தன், சர்மிளா, கயாநிதி, ரஜிகாந்தன் ஆகியோரின் மைத்துனரும் சிறிகரன், சிந்துஜா, ஞானதாஸ், ஜீவா ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2024) திங்கட்கிழமை மதியம் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(C-1299)

## RAVEENS EMC KARAVEDDY
## ENGLISH MEDIUM
### G.C.E O/L Results – 2023 (2024)

| No | Name | Results | English | Maths | Science | History | Tamil | Religion | ICT | Commerce | Eng.Lit |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | S.Abilash | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 2 | T.Shankeerth | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 3 | G.Mahelini | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 4 | N.Shangeeth | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 5 | K.Thiruparan | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 6 | K.Vyshika | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 7 | T.Thirsika | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 8 | S.Muhunthapan | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 9 | A.Ilakkiyan | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 10 | S.Aaruthie | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 11 | P.Laxana | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 12 | S.Anojan | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 13 | S.Arthihan | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 14 | G.Pryanka | 8A, B | A | A | A | A | A | A | A | A | B |
| 15 | A.Kavish | 8A, B | A | A | A | A | A | A | A | A | B |
| 16 | K.Kajaram | 8A, B | A | A | A | A | A | A | A | A | B |
| 17 | M.Mathupriya | 8A, C | A | A | A | A | A | A | A | A | C |
| 18 | J.Abishan | 7A, B,C | A | A | A | A | A | A | A | B | C |
| 19 | B.Rajeevan | 6A, 3B | A | A | A | A | A | A | B | B | B |
| 20 | S.Sharujan | 5A, 4B | A | A | A | A | A | B | B | B | B |
| 21 | A.Nirusha | 5A, 4B | A | A | B | B | A | A | A | B | B |
| 22 | P.Aranan | 4A, 5B | A | B | B | A | A | A | B | B | B |
| 23 | R.Harisram | 3A,5B,C | A | B | C | A | B | A | B | B | B |

We are decided to have our annual Impromptu Oratory and Prize giving function on 20th October 2024

Director
Mr.P.Easwaranathan (B.Sc (Hons) Agr. Dip.in.Edu)
0212263321

(C-1296)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வரவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர்

## ஜனாதிபதியுடன் முக்கிய சந்திப்பு



(கொழும்பு)

**நாட்டில் ஆட்சிமாற்றம் இடம்பெற்றுள்ள நிலையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் இலங்கைக்கு ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி ஒரு நாள் விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.**

இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயத்தின்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளது.

முன்னதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க புதுடில்லிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இந்த நிலையில் இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயத்தின்போது இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் பல்வேறு திட்டங்கள்குறித்து கவனம் செலுத்தப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயத்தின் போது பிரதமர் கலாநிதி ஹரணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (6)

# 244, 228 மாணவர்கள் உயர்தரத்தில் கல்வி கற்கத் தகுதி

## பரீட்சைகள் ஆணையாளர்

(கொழும்பு)

2023 க.பொ.த சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் நேற்று முன்தினம் இரவு வெளியாகிய நிலையில் 244, 228 மாணவர்கள் (இது 75.72 சதவீதம் ஆகும்) க.பொ.த உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை 13, 309 மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சையில் "9A" சித்தி பெற்றுள்ளதுடன் இது 4.13 சதவீதம் ஆகும்.

2.12 சதவீத மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் தோல்வியடைந்துள்ளனர்.

இந்த பரீட்சை முடிவுகளின் படி காலி சங்கமித்த மகளிர் பாடசாலை மாணவியொருவர் நாடளாவிய ரீதியில் முதலாம் இடத்தையும், 2 ஆம் இடத்தை கொழும்பு மியூசியஸ் கல்லூரியும் பெற்றுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (6)

# பொதுத் தகவல் பரீட்சை ஒத்திவைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஒக்டோபர் 12 ஆம் திகதி நடைபெறவிருந்த கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையின் பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை (GIT) ஒத்திவைக்கப்பட்டுள்ளது என இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதன் படி, ஒத்திவைக்கப்பட்டுள்ள குறித்த பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் 13 ஆம் திகதி நடைபெறும் என பரீட்சைத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த அறிவிப்பை உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு தெரியப்படுத்துமாறும் அதிபர்களை பரீட்சைகள் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது. (6)

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை
நோயாளர் நலன்புரிச் சங்கம்
மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றது

மிகவும் கஷ்டமான காலங்களில் பிரதேச செயலராகவும் அரச அதிபராக துணிவோடும் திறமையாகவும் ஏழை மக்களின் நல்வாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்து சிறப்பாக சேவையாற்றி ஓய்வு பெற்ற

உயர்திரு.
நாகலிங்கம் வேதநாயகன்

அவர்கள் வடக்கு மாகாண ஆளுநராக பதவியேற்றதையிட்டு மனம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.



சண்டிலிப்பாய் பிரதேச செயலராகவிருந்த 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மானிப்பாய் மத்திய மருந்தகம் மகப்பேற்றுமனையை தரமுயர்த்தி, சொந்தக்காணியில் நிரந்தரக் கட்டடமாக அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்ட பொழுது, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் அதிகமான ஏழை மக்கள் பகுதியாகிய மானிப்பாய் தெற்கு பிரதேசத்தில்தான் அமைய வேண்டுமென்று உறுதியாக நின்று அதை மானிப்பாய் தெற்கிலேயே மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையாக அமைவதற்கு மூல காரணமாகவிருந்த ஐயா. நா.வேதநாயகன் அவர்களை வாழ்த்தி வணங்குகின்றோம்.

Congratulations

தங்கள் வாழ்வும் வடமாகாண வளமும் மேன்மையுற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
"வாழ்க வளமுடன்"

பொதுமக்கள், நோயாளர் நலன்புரிச்சங்கம் மற்றும்
வைத்தியசாலை நிர்வாகம்
மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை.

(2128)

# க.பொ.த(சா/த) பரீட்சை மீளாய்வு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

வெளியாகியுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான மீளாய்வுக்கான விண்ணப்பங்களை நாளை முதல் 14 ஆம் திகதிவரை சமர்ப்பிக்க முடியும் எனப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

குறித்த பரீட்சை பெறுபேறுகளைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளங்களுக்குப் பிரவேசித்து பரீட்சார்த்திகளின் சுட்டெண் களை உள்ளீடு செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேநேரம், online exams.gov.lk என்ற இணையத்தளம் ஊடாக, சகல அதிபர்களுக்கும், தமக்கான பயனர் பெயரைப் பயன்படுத்தி பாடசாலைகளின் பெறுபேறு அட்டவணையைத் தரவிறக்கம் செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

# கொத்து, ப்ரைட் ரைஸ் 40 ரூபாவினால் குறைப்பு

## உணவக, சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

ப்ரைட் ரைஸ் மற்றும் கொத்து ரொட்டி ஆகிய உணவுகளின் விலையைக் குறைக்க உணவக உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த விலைக்குறைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ப்ரைட் ரைஸ் மற்றும் கொத்து ரொட்டி ஆகியவற்றின் விலை 40 ரூபாயினால் குறைக்கப்படும்.

இது தொடர்பில் அகில இலங்கை உணவக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஸான் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, இந்த விலைக்குறைப்பு மற்றும் சலுகைகளை வழங்காத உணவக உரிமையாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

இதேவேளை சமீபகாலமாக முட்டை விலை குறைந்துள்ளதால் இவ்வாறு உணவுப் பொருட்களின் விலையை குறைக்க முடிவு செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையில் மாற்றம் இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்ட பளுதூக்கல்
# வட. இந்து மகளிர் வெண்கலம்

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் வட. இந்து மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.டினா வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான பளுதூக்கல் போட்டிகள் பொலநறுவை இராஜகிரிய தேசிய பாடசாலையில் நடைபெற்று வருகிறது.

இதில் 17 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் 59 கிலோ எடைப் பிரிவில் வட. இந்து மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.டினா 78 கிலோ எடையைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார். (6-90)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 150 | 150 | 100-130 | 150 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 250 | 200 | 250 |
| தக்காளி | 300 | 300 | 250 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 200 | 150-200 | 240 |
| கோவா | 250 | 350 | 300 | 250 | 400 |
| கரட் | 200 | 250 | 280 | 240 | 300 |
| பூசணி | 80 | 60 | 80 | 50 | 100 |
| புடோல் | 60 | 120 | 100 | 100 | 200 |
| வாழைக்காய் | 180 | 200 | 200 | 200-220 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 250 | 150-300 | 350 |
| பெரிய வெங்காயம் | 320 | 180 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 450 | 400 | 500 | 350 | 600 |
| வெண்டக்காய் | 200 | 120 | 100 | 80-140 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 180 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 450 | 400 | 400 | 350-400 | 500 |
| லீக்ஸ் | 300 | 350 | 300 | 200 | 400 |
| பீற்றூட் | 100 | 140 | 130 | 150 | 200 |
| கறிமிளகாய் | 450 | 600 | 500 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 450 | 600-650 | 800 |
| போஞ்சி | 300 | 450 | 450 | 250 | 500 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 250 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 500 | 400 | 400 | 350-400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 140 | 140 | 80-130 | 100-140 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 600 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 450 | 500 | -- | 450 |
| முள்ளங்கி | 160 | 120 | 120 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 50 | -- | 160 |

## விரும்பினால்...

கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகவும் இந்த அழைப்பு உள்ளதாக யாழ்.மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் பொதுச்சபைக் கூட்டம் வவுனியா விருந்தினர் விடுதியில் நேற்று இடம் பெற்றது.

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினோம். தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என்பது நாங்கள் தொடர்ச்சியாகக் கூறி வருகின்ற விடயம். ஒரு கட்சி மற்றைய கட்சியின் மீது ஆதிக்கம் செலுத்துவதை விடுத்து உண்மையான கூட்டாகச் செயற்பட வேண்டும்.

அன்று தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் நாங்கள் கூட்டமைப்பாகச் செயற்பட்டபோது பல பிரச்சினைகள் உருவாகியிருந்தன. கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தாங்கள் தனியாகப் போட்டியிடப் போவதாகத் தமிழரசுக் கட்சி முடிவெடுத்திருந்தது. அதன் பின்னர் சம்பந்தருடன் நாங்கள் கலந்துரையாடச் சென்றபோதும் அவர் மிகத்தெளிவாக அதே கருத்தைச் சொல்லியிருந்தார். நீங்கள் தமிழரசுக் கட்சியை இல்லாமல் செய்யப் பார்க்கிறீர்களா? என்று அவர் கேட்டார்.

இருப்பினும் கூட்டமைப்பை விட்டுத் தமிழரசுக் கட்சி சென்றாலும் நாங்கள் இயங்காமல் இருக்கமாட்டோம் தானே. அப்படி இருக்கவும் கூடாது. எனவே நாங்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாக உள்ளூராட்சித் தேர்தலில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தோம். இப்போது பல கட்சிகள் எம்முடன் இணைந்திருக்கின்றன.

அவர்கள்தான் விட்டுச் சென்றவர்கள். எனவே அவர்கள்தான் வரவேண்டும். அவர்கள் வந்தால் எமது கட்சிகளோடும், சிவில் அமைப்புகளின் கூட்டோடும் கலந்துரையாடிய பின்னரே முடிவினை எடுக்கலாம். தனிப்பட்ட முறையில் சொன்னால் அவர்களது வரவு இந்தக் கட்டமைப்பைப் பெரிதாக்கும். அது எனக்கும் விருப்பம். அனைவரும் இணைவது தமிழ் மக்களுக்குப் பலமாகவும் இருக்கும்.

ஆனால் அவர்கள் சொல்லியிருப்பது தமிழரசுக்கட்சிச் சின்னத்தில் என்று. இது பழையபடி தமிழரசுக் கட்சிதான் முடிவெடுக்கப் போகின்றது என்ற அடிப்படையிலும், ஆதிக்கம் தமிழரசுக் கட்சியினுடையதே, நீங்கள் சேருங்கள் உங்களுக்கு நாங்கள் பார்த்துத் தருவோம் என்றவாறான ஒரு நிலைப்பாட்டையே கூறியிருக்கிறார்கள். அப்படியான நிலைப்பாட்டில் நாங்கள் போகமுடியாது. அனைவரும் சம பங்காளிகளாக ஒரு கூட்டமைப்பாக இணைந்தால் அதில் சேரமுடியும். அதற்கான நேரகாலம் இருக்கிறதோ தெரியாது. அவர்கள் மூன்று நாட்களையே அவகாசமாகக் கொடுத்துள்ளனர்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சங்குச் சின்னத்தை எடுப்பதற்கான ஒரு அபிப்பிராயம் இருந்தது. அதற்கான முயற்சியினைச் செய்வதாக தீர்மானித்திருக்கின்றோம். அதனைச் செய்வோம்.

அத்துடன் இளைஞர்களையும் நிச்சயமாக உள்ளே கொண்டுவரவேண்டும். அதேபோல அனுபவம் உள்ளவர்களும் இருக்கவேண்டும். இருந்தாலும் அப்படி ஒரு கருத்தாக்கம் மக்கள் மத்தியில் இல்லை. தேர்தலில் தாங்கள் போட்டியிடுவதற்காக சிலர் உருவாக்கும் ஒரு கருத்தே இது. இது கட்சிகளைப் பலவீனப்படுத்துகின்ற ஒரு விடயம். நாங்கள் கடந்த முறையும் இளைஞர்களை நிறுத்தியிருந்தோம். இப்போதும் நிச்சயமாக இளைஞர்கள் கேட்பார்கள்.

தமிழ்க் கட்சிகள் பிரிந்து நிற்பது பிரதிநிதித்துவத்தில் நிச்சயமாகத் தாக்கத்தை ஏற்படுத்தும். அதற்காகவே ஒரு கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று பார்க்கின்றோம். சிலர் சேர முடியாத நிலை இருக்கிறது. குறிப்பாக டக்ளஸ் தேவானந்தாவும் நாங்களும் சேருவது கஷ்டமான விடயம். அரசுடன் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இருந்தால், அரசாங்கம் சொல்வதையே செய்ய வேண்டிய சங்கடம் இருக்கிறது. எமது சார்பாகக் கதைக்க முடியாது. மௌனியாகவே இருக்க வேண்டும். அபிவிருத்திப் பணிகள் செய்யலாம். ஆனால் 1956 இற்குப் பின்னர் நியாயமான ஒரு தீர்வினை நோக்கியே தமிழ் மக்கள் வாக்களித்து வருகின்றனர் எனத் தெரிவித்தார். (ந-7)

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை இரவீந்திரன்



தோற்றம் 14.01.1949 — மறைவு 29.09.2024

வேலணை கிழக்கு 1ஆம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இரவீந்திரன் அவர்கள் நேற்று (29.09.2024) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - செல்லம்மா தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற பொன்னையா - இரத்தினம் தம்பதியரின் மருமகனும் செல்வராசாத்தியின் அன்புக் கணவரும் சுதாகரன் (சுதன் - ஜேர்மனி), தயாகரன் (கரன் - கட்டார்), கல்பனா (சுஜீ- இத்தாலி), சிறீரமணன் (உடற்கல்வி ஆசிரியர் - கொக்குவில் இந்துக் கல்லூரி), காஞ்சனா (சுமி) ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பலதா (ஜேர்மனி), கிறிஸ்ரலின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், திருகோணமலை), சசிக்குமார் (இத்தாலி), வானதி (விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி), ரயன் (சந்தோஷ் ஜுவலறி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சஞ்சை, சஜித், சாருஜன், கரிணிகா, சந்தோஷ், பிரணவி, நயனிகா ஆகியோரின் பேரனும் ஜெகதீஸ்வரன், ஜெகநாதன், ஜெயபாலன், ஜெயதாஸன், ஜெயசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.10.2024 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.


தகவல் - குடும்பத்தினர்
077 514 1667, 077 900 6939,
0049174345974[illegible]

(C-1301)

## கண்ணீர் அஞ்சலி

மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் ஆலய பரிபாலன சபையின் உப தலைவராக இருந்து ஆலய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய

### அமரர் கனகரத்தினம் வசீகரன்



அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. அவரின் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா கூத்தபிரானின் திருவடிகளில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை,
தில்லேஸ்வரம் சிவன் ஆலயம், மண்டைதீவு.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுகை அறிவித்தல்
# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
# புத்தூர்

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பெறுகைக்காக கோரப்படுகின்றது.
02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கமைவாக கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், பெறுகை ஆவணம் பகுதி 11இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள வழங்குனர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 16.00 மணிவரை 30.09.2024 ஆம் திகதியிலிருந்து 13.10.2024ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள வழங்குனர்கள் ஆங்கில மொழியிலுள்ள பூரணமான கேள்வி ஆவணமொன்றை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் 30.09.2024 தொடக்கம் 13.10.2024 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரையும் 14.10.2024 ஆம் திகதி மு.ப 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும் மீளளிக்கப்படாத பணமாக ரூபா.2000/- (வற் தவிர்த்து) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து 14.10.2024 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
08. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது) நாட்கள் 02.12.2024 வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 07.10.2024ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்

| இல | ஒப்பந்த இல | பெறுகை விபரம் | எண்ணிக்கை | ஒப்பந்த காலம் | கேள்வி பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளளிக்கும் பிணை வைப்பு (ரூபா) | வைப்பு செல்லு படியாகும் காலம் |
| 01 | NP/14/41(13)/AC3/Computer/2024 | Computer Set | 04 Nos | 30 நாட்கள் | 20,000.00 | 77 நாட்கள் (30.12.2024) |
| 02 | NP/14/41(13)/AC3/Photo Copier/2024 | Photo Copier | 01 Nos | 30 நாட்கள் | 15,000.00 | 77 நாட்கள் (30.12.2024) |
| 03 | NP/14/41(13)/AC3/Smart Panel/2024 | Smart Panel | 01 Nos | 30 நாட்கள் | 15,000.00 | 77 நாட்கள் (30.12.2024) |
| 04 | NP/14/41(13)/AC3/Colored Waste Bin/2024 | Colored Waste Bins | 80 Nos | 45 நாட்கள் | 15,000.00 | 77 நாட்கள் (30.12.2024) |

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,
புத்தூர்.

30.09.2024

(C-1286)

# ஊழல் குற்றம் சுமத்தப்பட்டால் கடுமையான நடவடிக்கை

## பிரதமர் ஹரிணி



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் அரச அதிகாரிகள் மீது ஊழல்குற்றம் சுமத்தப்பட்டால், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கத் தயங்கப் போவதில்லை என பிரதமர் ஹரிணி அமரசூரிய குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கண்டியில் அஸ்கிரிய பீடாதிபதியை தரிசனம் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பிரதமர் ஹரிணி அமரசூரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

எங்கள் ஆட்சியில் யாரேனும் குற்றம் சாட்டப்பட்டால், அவர் மீது நடவடிக்கை எடுக்க தயங்கமாட்டோம். நாங்கள் ஏற்கனவே நேர்மறையான மாற்றங்களைச் செய்து வருகிறோம்.

இதுபோன்ற மாற்றங்கள் தொடரும். குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகள் சிலர் மீது ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. வெளியில் இருந்து அரச ஊழியர்களை அழைத்து வர முடியாது. இருப்பவர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தினால் வழங்கப்படும் அனைத்து நியமனங்களுக்கும் அரசாங்கமே பொறுப்பு என்றும் தெரிவித்துள்ளார். (6)


லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
(354)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974


# இராசிபலன்

30.09.2024
புரட்டாதி 14, திங்கட்கிழமை
திரயோதசி முன்னிரவு 8.33 மணிவரை
மகம் முற்பகல் 8.52 மணிவரை
சுபநேரம் 12.02-1.33 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
பிரதோச விரதம்
சந்திராஷ்டமம்: உத்தராடம்

வளவன்

**மேஷம்** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாடு திருப்தி தரும் வகையில் அமையும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** உங்களின் மனரீதியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், நன்மைகள் நடைபெறும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, உற்சாகமான நாள்.

**சிம்மம்** நண்பர்கள் ஒளிவு மறைவின்றிப் பழகுவார்கள், குடும்பச் சுமை கூடும், விருப்பங்கள் நிறைவேற பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு

**கன்னி** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயம் பெறுவீர்கள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன் வரலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**விருச்சிகம்** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், சுணங்கிய காரியங்களில் முன் னேற்றம் காணும் நாள், வழிபாடு ஆனந்தம் தரும், [illegible] கூடும் வாய்ப்புண்டு.

**மகரம்** பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, கவலைகள் தீர பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், காரிய அனுபவங்கள் ஏற்படலாம், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மீனம்** உடல் நலன் சீராகும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு

**செய்ய முடிந்தவன் சாதிக்கிறான் செய்ய முடியாதவன் போதிக்கிறான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லொறி-கார் விபத்து

## நால்வர் காயம்



(கொழும்பு)

வெளிமடை - ஹம்பகஸ் தோவ பிரதான வீதியில் இட மஹந்தி பகுதியில் பயணித்த கார் ஒன்று எதிரே வந்த லொறி ஒன்றுடன் மோதி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் நால்வர் காயமடைந்து வெளிமடை வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளதாக ஹம்பகஸ் தோவ பொலிஸார் தெரிவித் தனர்.

இந்த விபத்து நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

காரில் பயணித்த இரு பெண்கள் மற்றும் இரு ஆண் களே காயமடைந்ததாகவும் அவர்கள் மேற்குறிப்பிட்ட அதே பகுதியைச் சேர்ந்தவர்கள் என வும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நால்வரும் மங்கள நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்த வேளையில், அவர்களில் ஒருவர் சுகயீன முற்ற நிலையில் அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போதே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வரு கின்றனர். (6)

# இரு விரிவுரையாளர்கள்

## பேராசிரியர்களாக பதவி உயர்வு





(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடத்தின் வணிகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரை யாளர் ஒருவரையும், விஞ் ஞான பீடத்தின் பௌதிகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரையும் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக் கழகப் பேரவை நேற்று முன் தினம் ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவை யின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுச் சுற் றறிக்கை நியமங்களுக்கு அமைய, திறன்ம அடிப்ப டையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த முகாமைத் துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடத்தின் வணிகவியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலா நிதி சிவபாலன் அச்சுதன் மற் றும் விஞ்ஞான பீடத்தின் பௌதிகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரை யாளர் கலாநிதி முருகதாஸ் தணிகைச்செல்வன் ஆகியோ ரின் மதிப்பீடு மற்றும் நேர் முகத்தேர்வு முடிவுகள் என்பன பேரவைக் கூட்டத்தில் சமர்ப் பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், வணிகவியல் துறைத் தலை வரும் சிரேஷ்ட விரிவுரையா ளருமான கலாநிதி சிவபாலன் அச்சுதன் வணிகவியலில் பேராசிரியராகவும், பௌதிகவி யல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலா நிதி முருகதாஸ் தணிகைச் செல்வன் இலத்திரனியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (6)

# நெடுந்தீவு கடற்பரப்பில் 17 இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடி யில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 17 தமிழக கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பினுள் நேற்று முன்தினம் சனிக்கி ழமை இரவு இரண்டு படகுக ளில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டிருந்த 17 கடற் றொழிலாளர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 17 பேரை யும் காங்கேசன்துறை கடற் படை முகாமில் தடுத்து வைத் துள்ள கடற்படையினர் அவர்க ளை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவ டிக்கை எடுத்துள்ளனர். (6-33)

# சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத் தினை முன்னிட்டு ஒக் டோபர்- 2024" உலகை வென்றவர் கள் வாசித்த மக்களே" எனும் தொனிப் பொருளில் யாழ் மாநகர சபையின் பொது நூலகத்தி னால் நடத்தப்படும் சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் நாளை காலை 9.30 மணி வரை பொதுசன நூலக கேட் போர் கூடத்தில் யாழ். மாநகரசபை ஆணையா ளர் ச.கிருஷ்னேந்திரன் தலைமையில் நடைபெற வுள்ளது. (6)

நவாலி தெற்கு முதி யோர் சங்கத்தின் முதியோர் தின நிகழ்வு நாளை களையோடை அம்மன் வீதி யில் அமைந்துள்ள சங்க மண்டபத்தில் பிற்பகல் 3 மணியளவில் நவாலி தெற்கு கிராம அலுவ லர் க. சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேசசெயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன் கலந்து கொள்ளவுள்ளார். (6)

# ஆசிரியர் கலாசாலையின் கலாசாலை தினம் நாளை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலா சாலையின் 101 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் கலா சாலை தின விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலை மையில் இடம்பெறும். இந் நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவரும் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளரு மாகிய திருமதி. ஜமுனா ராஜ சீலன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

கலாசாலை நிறுவுவதற்கு நிலத்தை வழங்கிய சேர் பொன் இராமநாதனை கௌர வப்படுத்தும் வகையில் இராம நாதன் நினைவுப் பேருரை மற்றும் "ஆசிரிய கல்வியிய லாளர்களின் தத்துவ ஆராய்ச்சிப் பட்டங்கள் தொடர் பில் மேற்கிளம்பும் சவால்க ளும் அவற்றைத் தாண்டிப் பய ணித்தலும்" என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக கல்வியி யல்துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வராவின் நினை வுப் பேருரையும் இடம்பெறவுள் ளது. (6-33)

# கழிவுப்பொதி வீச்சு பயணிகள் அசௌகரியம்

(கொழும்பு)

கொழும்பு கோட்டையிலி ருந்து பதுளை நோக்கிப் பய ணித்த உடரட்ட மெனிக்கே தொடருந்தில் பயணித்த வெளி நாட்டுப் பயணிகள்மீது கழிவுக ளால் தாக்குதல் நடத்தப்பட் டமை தொடர்பில் திம்புல பத் தனை பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்துள்ள னர்.

கொட்டகலை மற்றும் தல வாக்கலை ஆகிய தொடருந்து நிலையங்களுக்கு இடையில் வைத்து. வீதியில் சென்ற சில ரால் தொடருந்துக்குள் கழிவு கள் அடங்கிய பொதியொன்று வீசப்பட்டுள்ளது.

அந்த தொடருந்து பெட்டியில் பயணித்த பயணி ஒருவர் நானுஓயா தொடருந்து நிலை யத்திற்கு வழங்கிய தகவலை யடுத்து இது தொடர்பில் திம்புல பத்தனை பொலிஸ் நிலையத் துக்கு முறைப்பாடளிக்கப்பட் டுள்ளது. (6)

# இரண்டாயிரம் அதிகாரிகளை சாதாரண சேவையில் இணைக்க

## அரசாங்கம் உத்தேசிப்பு

(கொழும்பு)

தற்போது உயரடுக்கு பாது காப்புப் பிரிவில் பணியாற்றும் 2000 அதிகாரிகளை சாதா ரண பொலிஸ் சேவையில் இணைக்க ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

முன்னாள் அமைச்சர்கள் சிலருக்கு வழங்கப்பட்ட பாது காப்பும் பல வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத அமைச்சர்கள், உறுப்பினர்க ளின் பாதுகாப்பிற்காக வழங் கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளை நீக்குவதற்கும் யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் எதிர்காலத்தில் அமைச்சர்களுக்கான உயர டுக்கு பாதுகாப்பை வரம்பற்ற முறையில் பயன்படுத்துவதை நிறுத்த புதிய அரசாங்கம் தீர் மானித்துள்ளது.

உயரடுக்கு பாதுகாப்பு அளிக் கும் மதத் தலைவர்கள், பிரதம நீதியரசர் தலைமையிலான மற்ற நீதிபதிகள் மற்றும் சட்டத் துறை தலைவர்கள், தூதுவர் கள், வெளிநாட்டு பிரதிநிதிகள் ஆகியோரின் பாதுகாப்பை பழைய முறையிலேயே முன் னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள் ளது. (6)



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானம் மற்றும் சாட்டி கடற்கரைச் சூழல் [illegible] சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (படம்: சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசடி வழக்கில் இருவர் கைது

(கொழும்பு)

கிரிபத்கொடை பகுதியில் போலி ஆவணங்களைத் தயாரித்து மகிழுந்து ஒன்றை விற்பனை செய்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்கள் கந்தானை மற்றும் பமுணுகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 37 மற்றும் 39 வயதுடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேக நபர்கள் போலி ஆவணங்களைத் தயாரித்து, பன்னல பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு மகிழுந்து ஒன்றையே 1 கோடியே 30 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், விற்பனை செய்யப்பட்ட மகிழுந்தை மீட்டுள்ள கிரிபத்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (6)


## Kilinochchi District Secretariat
## Registration of Suppliers-2025

The Chairman, Department Procurement Committee now invites Applications for Registered Suppliers -2025 for Goods, Works and Services to the Kilinochchi District Secretariat and Divisional Secretariats for the financial year 2025.

1. Applications and full details could be obtained through our website www. kilinochchi.dist.gov.lk and filled online and upload online according the "Terms of References for Registration of Suppliers - 2025.
2. Copy of the duly uploaded applications should be sent by an envelope stating "Registration of Suppliers- 2025" on the left-hand corner of the envelope and addressed to: District Secretary, District Secretariat, Kilinochchi, by registered post on or before 20th November 2024. Otherwise, it can be submitted directly to a Finance Branch of the District Secretariat during office hours.
3. All full particulars of the above could be obtained from the website and below link.

Link: - http://www.kilinochchi.dist.gov.lk/index.php/en/news-events.html

**Procurement Entity,**
**Kilinochchi District Secretariat,**
**Tele: - 021 228 5484, Fax: - 021 228 5352.** (C-1287)






# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1989 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: கேட்டை<br>1 இல் செவ்<br>உயரம்: 6<br>தகைமை/தொழில்: HND IT, Business(own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண் இந்து சமயம் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: B/14804 | பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>10 இல் சூரி செவ்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/14817 |
| பிறப்பு:1987 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>8 இல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L, சுவிஸ்<br>எதிர்பார்ப்பு: விவாகரத் தானவர்<br>தொ.இ: B/14805 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>3 இல் சூரி செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Bsc, Software Engineer (எழுத்து எழுதி குழம்பி விட்டது)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14818 |
| பிறப்பு:1991 இந்து<br>நட்சத் திரம்: பூராடம்<br>கி.பா: 57 3/4<br>உயரம் :5'4"<br>தகைமை/தொழில்: BBM, DO<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14806 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>8 இல் செவ்<br>கி.பா: 63<br>உயரம் :5'4"<br>தகைமை/தொழில்:Bsc, Temporary Assistant Lecturer<br>எதிர்பார்ப்பு: உயர் பதவி<br>தொ.இ: G/14819 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# சேவை நலன் பாராட்டு

## திருமதி. செம்மணச்செல்வி உமாகரன்
(B.A, PGDE, M.A)



சேவை விபரம்

யா/ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலயம்
(17.08.1988–28.02.1993)
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி
(01.03.1993–10.03.1995)
தி/கப்பல்துறை அ.த.க பாடசாலை
(11.03.1995–31.04.1995)
யா/நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி வித்தியாலயம்
(01.05.1995–31.12.2001)
யா/வண்ணை.நாவலர் மகா வித்தியாலயம்
(01.01.2002–08.06.2010)
யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
(09.06.2010–29.09.2024)

மாணாக்கர் அறிவுக் கண் திறந்திட அயராது உழைத்த ஆசிரியரின் அளப்பரிய சேவையை உளமார பாராட்டுகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# காஷ்மீரை மீட்பதே இலக்கு

## ஐ.நா.சபையில் இந்திய வெளியுறவு அமைச்சர்

(வோஷிங்டன்)

**சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காஷ்மீர் பகுதியை மீட்பதே நோக்கம் என இந்திய வெளி விவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.**



ஐ.நா. வின் 79 ஆவது பொதுச்சபை கூட்டம் அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடந்து வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் நடந்த விவாத கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போதே வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைதியும், வளர்ச்சியும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதை ஐ.நா., எப்போதும் கடைபிடித்து வருகிறது. தற்போது உக்ரைன், காசா போன்ற இடங்களில் போர் நடக்கிறது. இவை நடந்து தான் ஆகும் என உலகம் விட்டுவிட கூடாது. போர் நடக்கும் போது சர்வதேச சமூகம் உடனடி தீர்வுகளை தேடுகிறது. அந்த உணர்வுகளுக்கு மதிப்பு தந்து, அதற்கேற்ப செயற்பட வேண்டும்.

உலகில் பல நாடுகள் தங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளால் பின்தங்கியுள்ளன.

ஆனால் சில நாடுகள் தெரிந்தே பேரழிவை தேர்வு செய்கின்றன. அதற்கு சிறந்த உதாரணம் எங்களின் அண்டை நாடான பாகிஸ்தான். அவர்களின் உள்நாட்டு உற்பத்தியையும், ஏற்றுமதியையும் பயங்கரவாதத்தை பொறுத்தே அளவிட முடியும்.

மற்ற நாட்டுக்கு தீமை நடக்க வேண்டும் என நினைத்தவர்கள், அதே தீமை தங்கள் நாட்டை விழுங்குவதை பார்க்கின்றனர். இது தான் கர்மா. மற்ற நாட்டின் நிலத்துக்கு ஆசைப்படும் இந்த செயலற்ற நாடு குறித்து உலக நாடுகள் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த சமயத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை நான் தெளிவாகக் கூறுகிறேன்.

பாகிஸ்தானின் எல்லை தாண்டிய பயங்கரவாத கொள்கை ஒரு போதும் வெற்றி பெறாது. அவர்களின் செயல்களுக்கு நிச்சயம் விளைவுகளை சந்திப்பர். பாகிஸ்தானால் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காஷ்மீர் பகுதியை விடுவிப்பது மட்டுமே இப்போது எங்களுக்கு இடையே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை என தெரிவித்தார். (6)

# கூகுளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும்






(வோஷிங்டன்)

"தான் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் கூகுளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என முன்னாள் ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் ஜனாதிபதிக்கான தேர்தல் நவம்பர் மாதம் நடக்க உள்ளது. ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் கமலா ஹாரிஸ் வேட்பாளராக போட்டியிடுகிறார். குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் போட்டியிடுகிறார்.

இந்நிலையில், "ட்ரம்ப் தேர்தல் ரேஸ் 2024" என்று கூகுள் தளத்தில் தேடினால், டிரம்பை பற்றி எதிர்மறை செய்திகள் அதிகம் காட்டப்படுவதாகவும், கமலா ஹாரிசின் பிரசார இணையதளம் காட்டப்படுவதாகவும் குடியரசு கட்சியினர் குற்றம்சாட்டினர்.

இது குறித்து ட்ரம்ப் நேற்று வெளியிட்ட அறிக்கையில், "கூகுள் நிறுவனம் செய்வது சட்டவிரோத நடவடிக்கை. தேர்தலின் போது அவர்களின் அப்பட்டமான தலையீட்டை இது காட்டுகிறது. இதற்காக நீதித்துறை அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன். "அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க தவறினால், ஆட்சிக்கு வந்த பின் சட்டத் துக்கு உட்பட்டு நானே அவர்கள் மீது வழக்கு தொடர நடவடிக்கை எடுப்பேன்" என்று கூறியுள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள கூகுள் நிறுவனம், "எந்த வேட்பாளருக்கும் சாதகமான முடிவுகளை கூகுள் மாற்றியமைக்கவில்லை. உலகத்தின் ஏதோ ஒரு இடத்தில், யாரோ ஒருவர் தேடிய தகவலை வைத்து இவ்வாறு குற்றம் சாட்டுவது சரியல்ல" என கூறியுள்ளது. (6)

# லெபனானில் தொடரும் வான்வழித் தாக்குதல்

## 33 பேர் பலி, 195 பேர் காயம்

(பெய்ரூட்)

லெபனானின் பெய்ரூட்டில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 33 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 195 பேர் காயமடைந்தனர்.

ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கு எதிராக தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல், இப்போது லெபனானை தளமாக கொண்டுள்ள ஹிஸ்புல்லா அமைப்பினர் மீதும் தாக்குதல் தொடுத்து வருகிறது. சில தினங்களுக்கு முன், லெபனான் மீது வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில் 21 குழந்தைகள், 39 பெண்கள் உட்பட 274 பேர் கொல்லப்பட்டனர். ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லாவும் கொல்லப்பட்டார்.


இந்நிலையில், தற்போது இஸ்ரேல் மீண்டும் லெபனான் மீது வான்வழித் தாக்குதல் நடத்தியிருக்கிறது. இந்தத் தாக்குதலில் 33 பேர் கொல்லப்பட்டனர், 195 பேர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல் சம்பவங்கள் எப்போது நிறுத்தப்படும் என தெரியாமல் பக்கத்து நாடுகள் அனைத்தும் திணறி வருகின்றன. பெய்ரூட்டில் நடந்து வரும் தாக்குதல்கள் மிகவும் கவலை அளிக்கிறது என ஐ.நா வருத்தம் தெரிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருக்கெடுத்த வெள்ளம் தத்தளிக்கும் நேபாளம்

- 112 பேர் உயிரிழப்பு
- மூடப்பட்ட 44 நெடுஞ்சாலைகள்
- 3 ஆயிரம் பேர் மீட்பு



(காத்மண்டு)

**நேபாளத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கனமழையால் அந்நாடு வெள்ளத்தில் மிதப்பதுடன், பல்வேறு இடங்களிலும் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது. மேலும் இதுவரை பலியானோர் எண்ணிக்கை 112 ஆக உயர்ந்துள்ளது.**

நேபாள் தலைநகர் காத்மண்டுவிலும் கொட்டித் தீர்த்த கனமழையால் சில இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் சிக்கி தற்போது வரை 112 பேர் பலியாகியுள்ளனர். இன்னும் பலர் மாயமாகி இருப்பதால் பலி எண்ணிக்கை உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது. மீட்பு பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. பாதிக்கப்பட்ட இடங்களில் இருந்து 3 ஆயிரம் பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட பலரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் பல ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. நிலச்சரிவு காரணமாக நாடு முழுவதும் 44 நெடுஞ்சாலைகள் மூடப்பட்டன. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையும் முடங்கியுள்ளது. உள்நாட்டு விமான சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது. கவ்ரெபலன் சவுக் மாவட்டம் தான் மிக அதிமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, நேபாள உள்துறை அமைச்சர் ரமேஷ் கூறுகையில், "காத்மண்டு பள்ளத்தாக்கு பகுதியில் கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது. நேபாள இராணுவம், காவல்துறை, துணை இராணுவம் என்பன மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளன. மக்கள் அவசியம் இன்றி வெளியே பயணிக்க வேண்டாம்" என தெரிவித்துள்ளார். மேலும், இரவு நேரங்களில் பயணம் செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக நேபாள அரசு அறிவித்துள்ளது. (6)

# ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவரை கொல்ல உத்தரவு கொடுத்தேன்

## பகிரங்கப்படுத்திய இஸ்ரேல் பிரதமர்



(பெய்ரூட்)

ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லாவை, ஒழிப்பதற்கான நடவடிக்கைக்கு தான் தனிப்பட்ட முறையில் அங்கீகாரம் அளித்ததாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

கிழக்கு மற்றும் தெற்கு லெபனானில் உள்ள டஜன் கணக்கான ஹிஸ்புல்லா தளங்களை இஸ்ரேல் விமானப்படை குறி வைத்து தாக்கியது.

இதில் அந்த அமைப்பின் தலைவர் 64 வயதான நஸ்ரல்லா கொல்லப்பட்டார்.

இது குறித்து இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு பேசுகையில் இஸ்ரேலிய ஜெட் விமானங்கள், தெற்கு பெய்ரூட்டில் உள்ள ஹிஸ்புல்லாவின் கோட்டைகள் மீது ஒரே இரவில் குண்டு வீசின. பல குடியிருப்பு கட்டடங்களை தரை மட்டமாக்கின.

இஸ்ரேலின் [illegible] நடவடிக்கைகளில் நஸ்ரல்லாவின் மரணம் ஒரு முக்கியமான சாதனை. இஸ்ரேலின் வடக்கு எல்லைகளில் பாதுகாப்பை மீட்டெடுப்பதற்கான ஒரு படி ஆகும்.

இஸ்ரேலியர்கள் மற்றும் பிற நாடுகளின் பல குடிமக்களின் கொலைக்கு காரணமான ஒருவரைத் தீர்த்து விட்டோம்.

இனி உலகில் அச்சுறுத்தல் இருக்காது. நாங்கள் ஒன்றாகப் போராடுவோம், கடவுளின் உதவியால் நாங்கள் ஒன்றாக வெல்வோம்.

எங்கள் குடிமக்களை அவர்களின் வீடுகளுக்குத் திரும்பவும் கடத்தப்பட்ட அனைவரையும் மீட்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

நாங்கள் அவர்களை ஒரு கணம் கூட மறக்க மாட்டோம். இவ்வாறு இஸ்ரேல் [illegible] வித்தார். (6)

# சுனிதா, வில்மோரை மீட்க விண்வெளிக்கு பறந்த 'டிராகன்'



(வோஷிங்டன்)

விண்வெளி மையத்தில் தங்கியிருக்கும் விண்வெளி வீரர்கள் சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோரை மீட்பதற்கான விண்கலம் நேற்று முன்தினம் இரவு சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு புறப்பட்டது.

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா சார்பில், போயிங் ஸ்டார் லைனர் ரொக்கெட் மூலம் சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் ஆகியோர் கடந்த ஜூன் 5 ஆம் திகதி சர்வதேச விண்வெளி மையம் சென்றனர். ஜூன் 7 ஆம் திகதி பூமியிலிருந்து ஏறத்தாழ 400 கி.மீ. உயரத்தில் உள்ள சர்வதேச விண்வெளி மையத்திற்குச் சென்றடைந்தனர்.


தற்போது 110 நாட்களுக்கு மேலாக சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் விண்வெளி மையத்தில் தவித்து வருகின்றனர். அவர்களை அழைத்து வர நாசா, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் உதவியை நாடியது. அந்நிறுவனத்தின் டிராகன் கேப்சூல் எனப்படும் விண்கலன் உதவியுடன் அவர்களை அழைத்து வர உள்ளனர். 4 வீரர்கள் குழுவுடன் விண்வெளிக்கு செல்லும் இந்த டிராகன் விண்கலன் அடுத்த ஆண்டு பெப்ரவரியில் தான் பூமிக்கு திரும்பும் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் நாசா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் இணைந்து சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோரை மீட்பதற்காக செல்லும் விண்கலம் நேற்று முன்தினம் இரவு 10.47 மணிக்கு புளோரிடா விண்விண்வெளி நிலையத்தில் இருந்து விண்கலம் புறப்பட்டுச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# செவ்வாழைப்பழம்





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Red Banana என அழைக்கப்படும் செவ்வாழைப்பழம் மருத்துவ குணங்கள் நிறைந்தது. சித்தமருத்துவ அடிப்படையில் வாத, பித்த, கப மூன்று உயிர்த்தாதுக்களையும் சமநிலையில் பேணக்கூடியது. எல்லா இன வாழைகளிலும் உயிர்ச்சத்துக்கள், கனிமங்கள், மருத்துவப் பண்புகள் அதிகமுள்ளது செவ்வாழைப்பழமாகும்.

செவ்வாழைப்பழத்தில் பீற்றா கரோட்டீன், போலிக் கமிலம், உயிர்ச்சத்து C, தயமின், பொஸ்பரஸ், கல்சியம், பொட்டாசியம், இரும்புச்சத்து, மக்னீசியம் ஆகிய சத்துக்கள் நிறைந்தது. இரப்பையில் சுரக்கப்படும் அமிலத்தை தன்னிலைப்படுத்தக்கூடியது. இதனால் நெஞ்செரிச்சலுக்கு, வயிற்றுப்புண்ணிற்கு செவ்வாழைப் பழம் தினமும் ஒன்று சாப்பிட்டு வர சிறந்த பலனைக் கொடுக்கும். செவ் வாழைப் பழத்தில் காணப்படும் B1,B6 போன்றவை இரத்தத்தை விருத்தி செய்யக் கூடியது.

இதனால் ஈமோக் குளோபின் அளவு கூடுவதால் இரத்தச்சோகை போன்ற நோய் நிலைமை ஏற்படாமல் தடுக்கக் கூடியது. அத்துடன் உயிர்ச்சத்து A இன் முன்னோடியாக பீற்றா கரோயிட்டினொயிட்டுகளும் காணப்படுவதால் நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கக் கூடியதாக இருக்கும்.

இப்பழத்தில் காணப்படும் கல்சியம் மக்னீசியச் சத்துக்கள் என்புகளை வலிமைப்படுத்தக் கூடியவை.

இதில் காணப்படும் பொட்டாசியம் சத்து உயர் குருதியமுக்கத்தை கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க உதவும். சிறுநீரகக் கற்கள் ஏற்படாமலும் தடுக்கக் கூடியது. சருமத்தை வரண்டு போகாமல் பாதுகாக்க கூடியது. நரம்புத் தளர்ச்சி இருப்பவர்கள் இரவில் தினம் ஒரு செவ்வாழைப் பழம் சாப்பிடலாம். இப்பழத்தில் கலோரி குறைவாக இருப்பதால் உடல் எடையைக் குறைக்க விரும்புவோர் தினமும் ஒரு செவ்வாழைப்பழம் காலையில் சாப்பிட வேண்டும். இதனால் பசி அதிக நேரம் எடுக்காது. எனவே மேலதிக உணவு எடுத்தலையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

புகைப்பிடித்தலுக்கு அடிமையானவர்கள் அல்லது நீண்ட காலமாக புகைப் பிடிக்கும் பழக்கம் இருந்து திடீரெனக் கைவிட்டவர்களுக்கு உண்டாகும் குறி, குணங்களை நீக்க தினம் ஒரு செவ்வாழைப்பழம் சாப்பிட்டு வரலாம். இப்பழத்தை ஒழுங்காகச் சாப்பிட்டு வர மலக்கட்டு நீங்கும்.

குடற்புண்ணின் தாக்கம் அதிகமுள்ளவர்கள் ஒரு செவ்வாழைப்பழத்தை சாப்பிட்ட பின்பு ஒரு கிராம் அதிமதுரத் தூளைச் சாப்பிட்டு வர குடற்புண் ஆறும். இதைத் தினம் இவ்வாறாக மூன்று வேளை சாப்பிடலாம்.

இருதயப் பாதிப்பு உள்ளவர்கள் தினமும் ஒரு செவ்வாழைப்பழத்தை வெட்டி தூய தேனில் ஊற வைத்து சாப்பிட்டு வர இருதயம் பலப்படும்.

பொதுவாக மூளை, இருதயம், ஈரல், சிறுநீரகம் போன்ற உள் உறுப்புகளின் திறமையான செயற்பாட்டிற்கு செவ்வாழைப்பழம் சாப்பிடுதல் சிறந்ததாகும்.

மாலைக்கண் நோய்க்கு செவ்வாழைப்பழம் சாப்பிடுதல் சிறந்தது. மேலும் புற்றுநோய்க் கலங்கள் உருவாகுவதைத் தடுக்கக் கூடியது. முகம் பொலிவாக இருப்பதற்கு தினமும் அதிகாலையில் ஒரு செவ்வாழைப்பழம் சாப்பிட்டு வருதல் சிறந்ததாகும்.

செவ்வாழைப் பழத் தோலை சிவப்பாக இருப்பதற்கு இதில் காணப்படும் வேதியற்பொருள் தான் காரணமாகும்.

Anthocyanin எனும் முக்கிய வேதியியற் பொருளாகும். இது எதிர் ஒட்சியேற்றத் தன்மையுடையது. இதனால் புற்றுநோய் வராமல் தடுக்கக் கூடியது.

நார்ச்சத்து காணப்படும்

அத்துடன் செவ்வாழைப் பழத்தில் காணப்படும் Prebiotic ஆனது குடலிலுள்ள நல்ல பக்றீரியாக்களை வளர்க்கக் கூடியது.

இதனால் நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கும். இவ் Prebiotics முக்கியமான உயிர்ச் சத்துகளை தொகுக்கக் கூடியது.


செவ்வாழைப்பழத்தில் Low Glycemic index இருப்பதால் இரத்தத்தில் சீனியின் அளவை அதிகளவில் கூட்டாது எனவே நீரிழிவு நோயாளிகள் 30 கிராம் அளவு செவ்வாழைப் பழத்தை முக்கால் வாசி பழுத்த பருவத்தில் தினம் எடுக்கலாம்.

முகம் பளபளப்பாக வருவதற்கு பாதி செவ்வாழைப் பழத்தை தூய தேனுடன் சேர்த்து மிக்சியில் அரைத்து முகத்தில் பூசி 30 நிமிட நேரம் கழித்து முகம் கழுவி வர முகம் பளபளப்பாக மாறும்.

முடி கொட்டுவதற்கு அல்லது பொடுகு ஏற்பட்டால் செவ்வாழைப்பழம் ஒன்றிற்கு 4.5 பாதாம் பருப்பு, சிறிய தேங்காய்த் துண்டு என்பவற்றை மிக்சியில் அரைத்து பசையாக்கி முடி கொட்டிய இடத்தில் தேய்த்து 30 நிமிட நேரம் சென்ற பின்பு கழுவி வரவும்.

இவ்வாறு தொடர்ந்து செய்து வர முடி கொட்டுதல், பொடுகு ஆகியவற்றை நீக்கக் கூடியது. குழந்தைப் பேறின்மைக்கு சிறந்த உணவாக தினமும் ஒரு செவ்வாழைப்பழத்தை தேனில் ஊற வைத்து சாப்பிட்டு வர சிறந்த பலனைக் கொடுக்கும்.

எமது பிரதேசத்தில் 12 வகையான வாழையினங்கள் உண்டு. இவை எல்லாவற்றிலும் சிறந்தது செவ்வாழைப்பழமே. ஆனால் இதை மக்கள் அரிதாகவே பயன்படுத்துகிறார்கள்.



## இன்று ஒரு தகவல் 233



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# பாவம் எது?

ஒரு ஆள் திருடிவிட்டு சிறைச்சாலைக்குப் போனான். சிறைச்சாலை அதிகாரி பார்த்தார். என்னப்பா அதற்குள் திரும்பி வந்துவிட்டாய் என்றார்.

வேறு வழி இல்லை என்றான் அவன். சரி இந்தத் தடவை என்ன தப்புச் செய்தாய் என்று விசாரித்தார். பகல் நேரத்திலே ஆள் இல்லாத வீடுகளிலே புகுந்து கொள்ளை அடித்து மாட்டிக்கொண்டேன். அதுதான் இங்கே கொண்டு வந்து விட்டுவிட்டார்கள் என்றான்.

போங்க சார் எவ்வளவு நாள் தான் நான் கண் முழிக்கிறது என்றான். இவனுக்கு இப்போதெல்லாம் தான் செய்வது பாவம் என்று புரிவதில்லை!

முதல் தடவ்வ வேறு வழியில்லாமல் ஒரு இடத்திலே திருடினான். பசிக்கொடுமை. பசித்த போது திருட ஆரம்பித்தவன் இப்போது பசி இல்லை என்றால் கூட திருடாமல் இருக்க முடியவில்லை. என்னடான்னு கேட்டால் தலைக்கு மேலே வெள்ளம் போய்விட்டது. இனிமேல் சாண் போனால் என்ன முழம் போனால் என்ன? என்று கேட்கின்றான்.

தொடர்ந்து ஒருவன் பாவம் செய்வதற்கே இது மாதிரி மனோபாவம் தான் காரணம். ஒருவன் வேறு வழி இல்லாமல் ஒரு நிர்ப்பந்தத்தினாலே தவறு செய்கிறான் போல ஆயிட்டு என்றால் அது பாவம் இல்லை! ஆனால் நிர்ப்பந்தமே இல்லாமல் வேண்டும் என்றே தவறு செய்வது பாவம்.

நீண்டகாலத்திற்கு முன்பு உஷஸ்தி என்று ஒரு முனிவர் இருந்தார். ஒரு சமயம் ஆலங்கட்டி மழை பெய்து ஊரிலே பயிர் எல்லாம் அழிந்து போய்விட்டது. எங்கே பார்த்தாலும் பஞ்சம் பசி! இந்த முனிவர் பல நாட்களாக பட்டினியாக இருந்தார். ஊர் முழுவதும் பட்டினியாக இருக்கும் போது முனிவருக்கு மட்டும் என்ன கிடைத்து விடப்போகின்றது. எப்படியாவது பல்லைக்கடித்துக் கொண்டு இருந்து பார்த்தார்.

ஒரு கட்டத்திற்கு மேல் அவரால் தாங்க முடியவில்லை. என்ன செய்வது என்று யோசித்தார். அந்தச் சமயத்தில் ஒரு யானைப்பாகன் அந்தப் பக்கம் வந்தான் அவன் எதையோ சாப்பிட்டு கொண்டு இருப்பது போல் தெரிந்தது. முனிவர் அவனைப் பார்த்து ஏதாவது கொடு என்றார். யானைப் பாகன் முனிவரை இரக்கத்துடன் பார்த்தான்.

ஐயா! நான் எச்சில்படுத்திய உளுந்து தான் இருக்கிறது.அதை உங்களுக்கு எப்படிக் கொடுப்பது என்று இழுத்தான். பரவாயில்லை. கொடு என்று சொல்லி அவன் கொடுத்த எச்சில் உளுந்தை வாங்கிச் சாப்பிட ஆரம்பித்தார்.

அடுத்த படியாக இந்தாங்க இந்தத் தண்ணீரை குடித்துக் கொள்ளுங்கள் என்றான் யானைப்பாகன். அது எச்சில் நான் குடிக்க மாட்டேன் என்றார் முனிவர். யானைப் பாகனுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன சுவாமி எச்சில் பட்ட உளுந்தை மட்டும் சாப்பிடுகிறீர்கள்! தண்ணீரை மட்டும் வேண்டாம் என்று சொல்லு கின்றீர்கள் என்று கேட்டான்.


இப்போது வேறு எங்கேயும் அன்னம் கிடைக்கவில்லை! இதைச் சாப்பிடவில்லை என்றால் என் உயிர் போய்விடும். ஆனால் தண்ணீர் எங்கேயும் கிடைக்கும். அதனாலே உன் எச்சில் தண்ணீரை நான் குடிக்கமாட்டேன் என்றார்.

இந்தக் கதையைக் கேட்கும் போது நம்மில் பல பேருக்குச் சிரிப்பு வரலாம். உளுந்துக்கு இல்லாத எச்சில், தண்ணீருக்கு மட்டும் வந்துவிட்டதோ? என்று கேட்கலாம். அப்படி எல்லாம் கேட்கக் கூடாது. இதிலே உள்ள தத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு நிர்ப்பந்தமும் இல்லாத போது பாவம் செய்கின் றவன் அதைத் தொடர்ந்து செய்து கொண்டே இருப்பான். அதற்கு எல்லையே இருக்காது என்று தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும். எவ்வளவு தான் தத்துவ விளக்கம் கொடுத்தாலும் சிலபேர் சுபாவத்தை மாற்றவே முடியாது. மிகவும் கஷ்டம். நமது ஆள் ஒருவன் நீதிமன்றத்திற்கு போனான். அவனைக் கூண்டிலே ஏற்றினார்கள். ஏறி நின்றான். முதலிலே ஒருவர் அவனிடம் வந்தார்.

நான் சொல்லுவது எல்லாம் உண்மை! உண்மையைத் தவிர வேறு எதுவும் இல்லை! என்று சொன்னான். இவன் மெதுவாக அவரை நிமிர்ந்து பார்த்து ஆரம்பத்திலேயே என்னை பொய் சொல்லச் சொல்லுகின்றீர்களே என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதியின் சாதுரியம் தவிர்க்கப்பட்ட விபத்து



(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தொன்று நேற்று முன்தினம் மாலை வெளிமடை - பொரலந்த வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது திடீரென பேருந்தின் பின்புற சக்கரங்கள் இரண்டு சமநேரத்தில் அகன்று விலகிச்சென்றுள்ளன.

இதனால் பேருந்து பாரிய விபத்தில் சிக்கவிருந்த நிலையில், சாரதி உரிய நேரத்தில் பேருந்தை தரித்து நிறுத்தியதால் விபத்து தடுக்கப்பட்டுள்ளதாகப் பேருந்தில் பயணித்த பயணிகள் தெரிவித்தனர்

பேருந்தில் 20 பயணிகள் வரை இருந்த நிலையில், சமயோசிதமாக செயற்பட்டு பேருந்தை நிறுத்தி, பயணிகளின் உயிரைக் காப்பாற்றிய சாரதியை பயணிகள் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. (6)

# 6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கையிருப்பில்

## மத்திய வங்கி அறிக்கை




(கொழும்பு)

தற்போது நடைமுறையில் உள்ள இரண்டு கொள்கை வட்டி வீதங்களுக்கு பதிலாக இந்த ஆண்டு ஒரே கொள்கை வட்டி வீதத்தை அமைக்க மத்திய வங்கி திட்டமிட்டுள்ளது.

இதன்படி, நிலையான வைப்பு வசதி வட்டி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வட்டி வீதத்தை ஒரே கொள்கை வட்டி வீதமாக நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலகின் பிற வங்கி அமைப்புகள் செயற்படும் விதம் தொடர்பாக ஒற்றைக் கொள்கை வட்டி வீத முறை ஆராயப்பட்டு செயற்படுத்தப்பட உள்ளது.

ஒரே கொள்கை வட்டி வீதத்தை நடை முறைப்படுத்துவது தொடர்பாக இலங்கையின் வங்கி அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாத இறுதிக்குள் இந்த நாட்டில் வெளி நாட்டு கையிருப்பு அளவு ஆறு பில்லியன் அமெரிக்க டொலர் களாக அதிகரித்துள்ளதாகவும், அடுத்த சில மாதங்களில் பண வீக்கம் குறைவாகவே இருக்கும் எனவும் மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (6)

# கட்டாக்காலி மாடுகளால் பயிர்ச் செய்கைகள் பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகளின் தொடர்ச்சியான தொந்தரவால் விவசாயிகள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கோம்பாவில் கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட கர்ணன் குடியிருப்பு கிராமத்தில் விவசாயத் தோட்டத்திற்குள் நுழைந்த கட்டாக்காலி மாடுகள் வெண்டி, பயறு, பூசணி போன்ற பயிர்களை அடியோடு அழித்து நாசமாக்கி உள்ளன.

மேட்டுப் பயிர்ச்செய்கையினை நம்பி வாழும் ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை தொடர்ச்சியாகக் கட்டாக்காலி மாடுகள் சேதப்படுத்தி வருவதனால் விவசாயிகள் பின்னடைவை சந்தித்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர் பில் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போதிலும் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என விவசா யிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (6)

# அரச வாகனங்களுக்கு அமுலாக்கப்படவுள்ள திட்டம்?

(கொழும்பு)

அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங் களில் அரச இலச்சினையை திணைக் களம் அல்லது நிறுவனங் களின் பெயரைப் பயன் படுத்துவது தொடர்பான சுற்றறிக்கையை மீண்டும் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

வாகனங்களை சட்ட விரோதமாக துஷ்பிரயோகம் செய்வதை தடுக்கும் வகையில் இவ்வாறு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு வாகனங்களுக்கு அரச இலச்சினை மற்றும் சம்பந்தப்பட்ட அரச நிறுவனத்தின் பெயரைப் பயன்படுத்துவதற்கான சுற்றறிக்கையை பொது நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் சீர்திருத்தங்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது.



அரச சின்னங்களைப் பயன் படுத்துவது தொடர்பாக 1992 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை மீளாய்வு செய்து சுற்றறிக்கை வெளியிட்டிருந்தது.

அதில் வாகனங்களில் அரச இலச்சினையைப் பயன்படுத்துவது தொடர்பாக மட்டுமே அறிவுறுத்தல்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (6)

# கல்விப் பணியே கடவுள் பணி என வாழ்ந்த மங்கையர் திலகம்

செல்வி திலகவதி பெரியதம்பி அவர்கள் வயோதிபம் காரணமாக அமரத்துவம் அடைந்துவிட்டார். இவருடைய மறைவின் மூலம் ஓர் உண்மையான, நேர்மையான, துணிச்சல் மிக்க இரும்புப் பெண்மணி இவ் உலகை விட்டு ஆண்டவன் அடியை அடைந்து விட்டார் என்று கூறலாம்.

இவர் க.பொ.த உயர்தர விஞ்ஞானத் துறையில் கல்வி கற்று பல்கலைகழகம் சென்று விவசாய சிறப்புப் பட்டதாரியாக வெளியேறினார். ஆசிரியப் பணியைத் தெரிவு செய்த இவர், முதலாவது பெண் விவசாய உதவிக்கல்விப் பணிப்பாளராக பணியைத் தொடர்ந்தார்.

1994 ஆம் ஆண்டளவில் முதலாவது பெண் யாழ் மாவட்ட பிராந்தியக் கல்விப்பணிப்பாளராக (RDE) பணியை தொடர்ந்தார். 1995ஆம் ஆண்டு போர் மேகம் சூழ்ந்த காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் முதலாவது வடக்கு மாகாண பிரஜை என்ற வகையிலும் தாய்குலத்தை சேர்ந்தவர் என்ற வகையிலும் துணிச்சலுடன் வடக்கு, கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராக கடமையேற்றார்.

இவருடைய காலத்தில் மிகப்பெரிய கல்வி மறுசீரமைப்பு பாடசாலை கல்வியில் அறிமுகப்படுத்தப்பட்டபொழுது அதனை வெற்றிகரமாக எமது பகுதியில் நிறைவேற்றினார். அதேபோல் ஆசிரிய தரங்கணிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவேற்றுவதில் பெரும்பங்கு வகித்தார்.

இணைபாடவிதான செயற்பாடுகளில் அக்கறை செலுத்தி தமிழ் மொழித்திறன், விளையாட்டு, சாரணியம், ஆங்கில பாட விருத்தி, விஞ்ஞான கணித பாட விருத்தி ஆகியவற்றில் பல விசேட செயற்றிட்டங்களை முன்வைத்து பணியாற்றினார். அத்துடன் ஆங்கில மொழி மூல (Lingual) கல்வியையும் அறிமுகம் செய்தார்.

இவ்வாறு சீரிய பணியாற்றி கொண்டிருக்கும் காலத்தில் தமிழ்மொழித் தின பரிசளிப்பு நிகழ்வுகளில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக ஐந்து ஆண்டுகளிற்கு முன்னரே தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார். 25 ஆண்டுகளிற்கு இவருடைய பதவிக்கு எந்த ஒரு பெண்ணும் நியமனம் பெறவில்லை. இவரைத் தொடர்ந்து, வட-கிழக்கு 2007 இல் இருந்து வடமாகாண கல்விப் பணிப்பாளர் பதவியையும் வடக்கு மாகாணத்தவர்களே வகித்து வருகின்றனர். இது இனியும் தொடருமா? என்பது தெரியவில்லை.

ஓய்வுபெற்ற நிலையில் கல்வித் துறையில் கொண்ட ஆர்வம் காரணமாக யாழ் மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைமைப் பதவியை ஏற்று இயங்கத் தொடங்கினார். அன்றைய காலகட்டத்தில் பல்வேறு அச்சுறுத்தல்களை அதிபர், ஆசிரியர்கள், கல்வித் துறையினர் எதிர்நோக்கிய சந்தர்ப்பத்தில் அதனைத் தடுத்து நிறுத்தும் அரணாக இவர் திகழ்ந்தார்.

2003 இல் நான் யாழ் வலயக் கல்விப்பணிப்பாளராக பதவியேற்ற நிலையில், பிராந்திய ஆங்கில வள நிலையம், தொண்டமானாறு வெளிக்கள நிலையம், ஏற்கனவே இருந்த வட இலங்கை சங்கீத சபை, ஆரிய திராவிட பாச அபிவிருத்தி சங்கம் ஆகிய எமது மாவட்ட கல்வி அபிவிருத்தியில் பங்கு பற்றும் நிறுவனங்களை யாழ் வலயப் பணிமனையில் இணைத்துக் கொண்டது. போல யாழ் மாவட்ட கல்விப் பேரவைக்கும் இடம் வழங்கப்பட்டது.

அதன் தலைவர் என்ற ரீதியில் அமரர் அவர்கள் தினமும் பேருந்தில் வருகைதந்து பேரவை செயற்பாடுகளில் ஈடுபடுவதை வழக்கமாகக் கொண்டார். அந்த வகையிலும் எமது பாதுகாப்பு அரணாக அம்மையார் திகழ்ந்தார்.

இவ்வாறு அமைதியாகவும் அடக்கமாகவும் துணிச்சலுடனும் செயற்பட்ட அம்மையார் தனது கடமையை செவ்வனே நிறைவேற்றி இறைவனடி சேர்ந்துள்ளார்.



கல்வித்துறையில் பணியாற்றும் குறிப்பாக எமது பெண்களிற்கு இவரது வாழ்க்கை உறுதுணையாக இருக்கும் என நம்புகிறேன். ஆணாதிக்கம் நிறைந்த எமது சமூகத்தில் எமது பெண்களிற்கு அம்மையாரின் வாழ்க்கை ஒரு பாடமாக இருக்கும்.

அம்மையாரின் ஆத்மா சாந்தியடைய இறையருளை பிரார்த்திக்கின்றேன்.

**ப.விக்கினேஸ்வரன்,**
**வடமாகாண கல்விப் பணிப்பாளர்.**
**(ஓய்வுநிலை)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 593





"வேறு என்ன செய்ய வேண்டும்? நான் இருக்க வேண்டிய சிம்மாசனத்தில் அவர் இத்தனை வருடங்களாக அமர்ந்திருப்பது போதாதா? அது குற்றம் இல்லையா? அநீதி இல்லையா?"

"குழந்தாய்! பால்போல் தூய்மையாக இருந்த உன் உள்ளத்தில் இந்த விஷம் எப்படி வந்தது? யார் உனக்குத் துர்ப்போதனை செய்து கெடுத்துவிட்டார்கள்?" என்று இரக்கமான குரலில் அன்னை கேட்டார்.

"எனக்கு ஒருவரும் துர்ப்போதனை செய்து கெடுக்கவில்லை. தங்கள் மகனை அவ்வளவு நிர்மூடனாக ஏன் கருதுகிறீர்கள்? எனக்குச் சுய அறிவே கிடையாது என்பது தங்கள் எண்ணமா?"

"எத்தனை அறிவாளிகளாயிருந்தாலும், துர்ப்போதனையினால் மனம் கெடுவது உண்டு. கரைப்பவர்கள் கரைத்தால் கல்லுங் கரையும் அல்லவா? கூனியின் துர்ப்போதனையினால் கைகேயியின் மனம் கெட்டுப்போகவில்லையா?"

"பெண்களின் மனத்தை அப்படித் துர்ப்போதனையினால் கெடுத்துவிடலாம் என்பதை நானும் தெரிந்துகொண்டுதானிருக்கிறேன்!"

"மதுராந்தகா! யாரைக் குறிப்பிட்டுச் சொல்கிறாய்?"

"தாயே! என்னை, எதற்காக அழைத்தீர்கள். அதைச் சொல்லுங்கள்!" சற்றுமுன் நடந்த வைபவத்தில் நீ பிரசன்னமாய் இருந்தாய் அல்லவா?

"இருந்தேன், யாரோ வழியோடு போகிற சிறுவனைப் பல்லக்கிலேற்றி அழைத்து வரச்செய்தீர்கள். சிம்மாசனத்தில் ஏற்றி வைத்து உபசரித்தீர்கள். அவன் தலைகால் தெரியாத கர்வம் கொண்டிருப்பான்"

"ஐயோ! அப்படி அபசாரமாய்ப் பேசாதே, குழந்தாய். வந்திருந்தவர் வயதில் வாலிபரானாலும் சிவஞான பரிபக்குவம் அடைந்த மகான்."

அவர் மகானாகவேயிருக்கட்டும், நான் குறைத்துப் பேசினால் அவருடைய பெருமை குறைந்துவிடாதல்லவா? அந்த மகானுக்குத் தாங்கள் இராஜரீக மரியாதைகள் செய்ததையும் நான் ஆட்சேபிக்கவில்லை. என்னை எதற்காக அழைத்தீர்கள் என்று சொல்லுங்கள்!"

செம்பியன் மாதேவி ஒரு நெடிய பெருமூச்சு விட்டார். பிறகு கூறினார், "உன்னுடைய குணத்தில் ஏற்பட்டிருக்கும் மாறுதல் எனக்குப் பிரமிப்பை உண்டாக்குகிறது. பழுவேட்டரையர் மாளிகையில் இரண்டு வருட வாசம் இப்படி உன்னை மாற்றிவிடும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. போனால் போகட்டும். என்னுடைய கடமையை நான் செய்ய வேண்டும்.

உன் தந்தைக்கு நான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற என்னாலியன்ற வரையில் முயலவேண்டும் மகனே! உன்னை அழைத்த காரியத்தைச் சொல்வதற்கு முன்னால், என்னுடைய கதையை, நான் உன் தந்தையை மணந்த வரலாற்றைக் கூறவேண்டும். சற்றுப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிரு!"

மதுராந்தகன் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருக்கப் போவதற்கு அறிகுறியாகக் கால்களை மண்டி போட்டுக் கொண்டு, கைகளைப் பீடத்தில் நன்றாய் ஊன்றிக் கொண்டு உட்கார்ந்தான்.


"நான் பிறந்த ஊராகிய மழபாடிக்கு நீ குழந்தையாயிருந்தபோது இரண்டொரு தடவை வந்திருக்கிறாய். அந்த ஊரில் உள்ள சிவபெருமான் ஆலயத்தையும் பார்த்திருக்கிறாய். கோச்செங்கட் சோழ மன்னர் சிவாலயம் எடுப்பித்த அறுபத்து நாலு ஸ்தலங்களில் அதுவும் ஒன்று எனப் பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். உன்னுடைய பாட்டனார், என்னுடைய தந்தை, மழபாடியில் பெரிய குடித்தனக்காரர். எங்கள் குலம் தொன்மையானது. ஒரு காலத்தில் மழவரையர்கள் செல்வாக்குப் பெற்ற சிற்றரசர்களாயிருந்தார்கள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## எத்தன் செய்த தந்திரம்



(நேற்றைய தொடர்ச்சி...)

பங்காரு நாயுடுவைப் பார்த்ததுமே, மறுபேச்சின்றி, ஐநூறு வெள்ளிப் பணத்தை அப்படியே மூட்டையாகக் கட்டிக் கொடுத்தாள் வணிகரின் மனைவி. அதை வாங்கிக் கொண்ட கொமுரு, அங்கிருந்து உடனே புறப்படத் தொடங்கினான் வேக வேகமாக.

அவன் புறப்படத் தொடங்கிய அந்தச் சமயத்தில் தான், கட்டிலுக்குக் கீழே ஒளிந்திருந்த எத்தன், மெல்ல வெளியே வந்தான். அப்படி வெளியே வந்தவன், தான் தெரிவித்த அதே பங்காரு நாயுடு மாதிரியான தோற்றத்தோடு கூடிய ஒருவன் இப்போது மெல்ல நழுவிக் கொண்டு இருப்பதைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனான்.

நம்முடைய திட்டத்தை முன்கூட்டியே தெரிந்து கொண்டு விட்ட எவனோ ஒருவன் தான், இப்படி இங்கிருப்பவர்களையெல்லாம் ஏமாற்றிப் பண மூட்டையோடு நழுவிக் கொண்டிருக்கிறான் எனச் சட்டென உணர்ந்தான் எத்தன்.

அவ்வளவுதான், பண மூட்டையோடு நழுவும் அவனை விரட்டிப் பிடிப்பதென முடிவு செய்தான். அடுத்த நொடியே முடிவு செயலானது. "ஏய், ஏய்..." என்று கத்திக் கொண்டு எத்தன் கொமுருவின் பின்னால் ஓடத் தொடங்கினான். இந்தச் சத்தத்தைக் கேட்ட பிறகு தான் சட்டென்று திரும்பிப் பார்த்தான் பண மூட்டையோடு நழுவிக் கொண்டிருந்தான் எத்தன்.

அவ்வளவுதான்! அப்படியே அதிர்ச்சி அடைந்து உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தலை தெறிக்க ஓடத் தொடங்கினான் கொமுரு. இப்போது, எத்தன் விடுவதாகவும் தெரியவில்லை. எத்தன் நிற்பதாகவும் தெரியவில்லை.

இருவரும் ஓடிக்கொண்டே இருந்தனர். இப்படி இருவரும் ஓடிக்கொண்டே இருக்கும்போது, ஊருக்கு வெளியே சற்றுத் தூரத்தில், வைக்கோல் போர்கள் இருந்தன. இந்த வைக்கோல் போருக்குள் நுழைந்து கொண்டு விட்டால், யாராலும் கண்டுபிடிக்க முடியாது என்று நினைத்த கொமுரு, மறுகணமே, வைக்கோல் போருக்குள் புகுந்து மறைந்துவிட்டான்.

கொமுருவை விரட்டியபடி, அந்தக் களத்து மேட்டிற்கு வந்து சேர்ந்த எத்தன் பண மூட்டையை எடுத்து கொண்டு ஓடி வந்தவன் திடீரெனக் காணாமல் போனது பற்றிக் கவலைப்படலானான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தவறுகளை உணரும் போது, அதை மீண்டும் செய்யாதிருக்கவும் உறுதி எடுக்க வேண்டும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் தமிழினத்தின் ஊழ்வினைப் பயனோ இது!

உயிர்களை இழந்து, உடைமைகளை இழந்து, சொந்த ஊர்களை விட்டு ஏதிலிகளாக அலைந்தும் எம் இனம் சார்ந்து சிந்திப்பார் நம் அரசியலில் இல்லை எனும்போது இதைவிட்ட ஊழ்வினைப் பயன் வேறு எதுவாக இருக்க முடியும்.

ஆம், இந்த உலகில் சிறுபான்மை இனம் என்ற ஒரே காரணத்துக்காக சொந்த நாட்டில் ஆட்சியாளர்கள் குண்டு போட்டு கொல்லப்பட்ட இனம் நம் தமிழினமாக மட்டுமே இருக்க முடியும்.

இதையும் கடந்து, வன்னிப் பெருநிலப்பரப்பில் படையினரால் கொன்றொழிக்கப்பட்ட நம் உறவுகள் ஒருபுறம்.

படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு நடந்தது என்ன என்பது கூடத் தெரியாத துன்பம் மறுபுறமாக; நம் தமிழினம் பரிதவிக்கிறது.

அந்தோ! தம் பிள்ளைகளைத் தேடுகின்ற பெற்றோர்கள் இன்னமும் தன் பிள்ளை வருவான் என்று காத்திருக்கின்றனர்.

என்னே! கொடுமை. ஓர் இனம் இத்துணை துன்பங்களை அனுபவிக்கின்ற போதிலும் அந்த இனத்திடம் ஓர் உன்னதமான அரசியல் தலைமை இல்லை எனும்போதுதான், நம் இனம் ஏதோ பாவ வினைக்கு ஆட்பட்டுள்ளதென்று எண்ணத் தோன்றுகிறது.

உண்மை. இலட்சக்கணக்கான மக்களை இன அழிப்பில் பறிகொடுத்த நம் தமிழினத்தில் எத்துணை வைராக்கியமான அரசியல் தலைமை இருந்திருக்க வேண்டும்.

ஆனால் எம் தமிழினத்தின் அரசியல் தரப்புகள் முரண்பட்டு நிற்பதுபோல – அரச சலுகைகளுக்காக விலை போனது போல – சர்வதேச சமூகத்தில் இருப்பவர்கள் போடுகின்ற திட்டங்களை ஏன்? எதற்கு? என்று ஆராயாமல், கூலி கிடைக்கிறதே என்பதற்காக அவற்றை அப்படியே நடைமுறைப்படுத்த முற்படுகின்றது போல, எத்தனை எத்தனை வஞ்சகப் பேயாட்டம்.

கடவுளே! தம் பெற்றோரை – உடன் பிறப்புகளை விட்டு விட்டு, என் தமிழ்த் தேசம் வாழ வேண்டும் என்பதற்காகத் தோளில் ஆயுதம் சுமந்து விழுப்புண்பட்டு உயிரிழந்த பிள்ளைகள்.

தாயகக் கனவோடு சென்று போரில் அகப்பட்டு அங்கவீனமாகி வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கும் நம் உறவுகள்.

இவையெல்லாம் வெறுங்கதையாகிப் போய், பாராளுமன்றப் பதவிக்காக எதுவும் செய்ய முற்பட்டுள்ள நம் தமிழ் அரசியலை நினைக்கும்போது, நம் இனம் செய்த ஊழ்வினைப் பயனோ இது என்று எண்ணுவதில் எந்தத் தவறும் இல்லை.

ஆம், எங்கள் தவத்திரு யோகர் சுவாமிகள் காசியில் இருந்து எழுதிய கடிதம் பற்றி நினைத்துப் பார்க்கின்றோம்.

இன்னமும் எம் கர்ம வினை தீரவில்லை என்பதைத் தவிர வேறு எதுவும் எமக்குப் புரியவில்லை.

## மக்கள் சக்தியுடன் இணைவதாயின் ரணிலைப் பதவி விலக்க வேண்டும்

### சம்பிக்க ரணவக்க நிபந்தனை

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணி அமைக்க விரும்பினால், ரணில் விக்கிரமசிங்கவைத் தலைவர் பதவியிலிருந்து விலக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் ருவான் விஜேவர்தன ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டும் எனவும் ரணவக்க வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒப்பிடுகையில், சிறிய அரசியல் சக்தியாக உள்ள ஐக்கிய தேசியக் கட்சியே இதனைத் தீர்மானிக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பை ஏற்க வேண்டுமா? என்பதை ஐக்கிய மக்கள் சக்தி தான் தீர்மானிக்க வேண்டும் என்றார். (ந-7)

## தற்கொலைக்கு முயன்ற யுவதியை காப்பாற்றிய பொலிஸ் சார்ஜன்ட்

### மன்னாரில் சம்பவம்

மன்னார் பிரதான பாலத்திலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொள்ள முயன்ற 24 வயதுடைய யுவதியொருவர் மன்னார் போக்குவரத்து பிரிவுப் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்றுக் காலை மன்னார் நகருக்குள் நுழையும் பிரதான பாலத்திற்கு அருகில் உள்ள அலுவலகத்தில் பிரதேச போக்குவரத்துப்பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் சார்ஜன்ட் மலலசேகர (41308) பணிபுரிந்து கொண்டிருந்த போது யுவதியொருவர் கையில் கடிதம் ஒன்றை எடுத்துக் கொண்டுவந்துள்ளார்.

பின்னர் குறித்த யுவதி பொலிஸ் அதிகாரியிடம் தமிழ் தெரியுமா? எனக் கேட்டுள்ளார். அதற்கு சார்ஜன்ட் நீங்கள் யார்? என்று தமிழில் கேட்க அந்தப் பெண், தன் கையில் இருந்த கடிதம் மற்றும் கையடக்கத் தொலைபேசியை பொலிஸ் சார்ஜன்ட்டின் மேசையில் வைத்து விட்டு மன்னார்ப் பாலம் நோக்கி ஓடியுள்ளார்.

சம்பவத்தை அவதானித்த பொலிஸ் சார்ஜன்ட் மலலசேகரன், குறித்த யுவதி தற்கொலை செய்து கொள்ளப் போவதை உணர்ந்து அவரைப் பின்தொடர்ந்துள்ளார்.

அந்தப் பெண் பாலத்தில் குதிக்கத் தயாரான நிலையில் குறித்த பொலிஸ் சார்ஜன்ட் அந்தப் பெண்ணைக் காப்பாற்றினார்.

பிரஸ்தாப யுவதி மன்னார் பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-7,285)

## க.பொ.த(சா) பரீட்சைப் பெறுபேறு காலி மாணவி முதலிடம்

*(கொழும்பு)*

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள நிலையில் காலி சங்கமித்தா மகளிர் கல்லூரி மாணவி ஹிருணி மல்ஷா குமாரதுங்க, நாடளாவிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இரண்டாம் இடத்தை கொழும்பு மியூசியஸ் கல்லூரியின் குலுனி மெட்சரா மற்றும் குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரியின் விமன்சா ஜயனதி ரத்னவீர ஆகியோர் பெற்றுள்ளனர்.

இந்த வருடத்தின் பெறுபேறுகளின் படி மூன்று மாணவிகள் நான்காம் இடத்தைப் பெற்றுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு விஷாகா மகளிர் கல்லூரியின் செஷானி செஹங்சா ஜயவர்தன, நுகேகொட அனுலா கல்லூரியின் மெதுகி சமோதி பெரேரா மற்றும் காலி சங்கமித்த மகளிர் கல்லூரியின் நதுன் பமுதிதா ரணவக்க ஆகியோர் நான்காம் இடத்தை பெற்றுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏழாவது இடத்திற்கு நான்கு மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் 244, 228 மாணவர்கள் கல்விப் பொதுத் தராதர உயர்தரத்திற்குத் தகுதிபெற்றுள்ளனர். இது 75.72 சதவீதம் ஆகும்.

அத்துடன் 13,309 மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சையில் "9ஏ" சித்தி பெற்றுள்ளதுடன் இது 4.13 சதவீதம் ஆகும்.

இதேவேளை, 2.12 சதவீத மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் தோல்வியடைந்துள்ளனர். (ந-7)

## மகளுக்கு சூடு வைத்த தாயொருவர் கைது

*(கண்டி)*

முன்பள்ளிக்குச்செல்ல மறுத்த தனது மகளைத் தீக்காயங்களுக்கு உள்ளாக்கிய தாயொருவரை கண்டிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கண்டி, நாகஸ்தென்ன பகுதியில் வாடகை வீடொன்றில் தங்கியிருந்த 30 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த தாய் கரண்டியைச் சூடாக்கி சிறுமியின் உடலில் தீக்காயங்களை ஏற்படுத்தியுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

காயமடைந்த சிறுமி தற்போது கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ந-7)

### அரசியலமைப்புச் சபையில் மாற்றம்

## சிறிபால டி சில்வா வெளியே விஜித ஹேரத் உள்ளே

*(கொழும்பு)*

அரசியலமைப்பு சபைக்கான ஜனாதிபதியின் பிரதிநிதியாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அமைச்சர் விஜித ஹேரத்தை நியமித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அரசியலமைப்பு சபையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

பிரதமரான கலாநிதி ஹரினி அமரசூரிய புதிய அரசியலமைப்புச் சபை உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும், புதிய பாராளுமன்றம் அமைக்கப்படும் வரை அரசியலமைப்புச் சபையின் செயற்பாடுகள் தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அடுத்த மாதம் 09ஆம் திகதி அரசியலமைப்புச் சபை கூடும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹாசிம் மற்றும் சாகர காரியவசம் மற்றும் சிவில் உறுப்பினர்கள் மூவர் அரசியலமைப்புச் சபையின் ஏனைய உறுப்பினர்களாவர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும்

## ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

23

17. கூட்டுறவு நடவடிக்கைகள், வர்த்தக நடவடிக்கைகள் (நிரல் III இலும் உள்ளது)
18. காணி (நிரல் II மற்றும் IIIஇல் உள்ளதைத்தவிர)
19. சிறு நீர்பாசனம், நீர்பாசனம் (நிரல் II மற்றும் IIIஇல் உள்ளதைத்தவிர)
20. விலங்கு வேளாண்மை (சில விடயங்கள் மட்டும்)
21. மாகாணசபைக்குட்பட்ட விஞ்ஞான கைத்தொழில் சார் ஆய்வுகளை, மேம்படுத்தல் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி திட்டம் (மத்திய அரசாங்கத்துடன் முரண்படாத விடயங்கள்),
22. சீர்திருத்த மற்றும் நன்நடத்தை நிலையங்கள்,
23. போதையூட்டும் மதுபானங்கள் வைத்திருத்தல், கொள்வனவு, கொண்டுசெல்லல் மற்றும் விற்பனை
24. மயானங்கள் (தேசிய நினைவுக் கல்லறைகள் தவிர்ந்த),
25. வாசிகசாலைகள், அரும்பொருள் நிலையங்கள், புராதான நினைவுச் சின்னங்கள், வரனாற்று சின்னங்கள் (மாகாண சபைகளால் நிர்வகிக்கப்படுபவை),
26. மாகாணங்களுக்குட்பட்ட சுரங்கத் தொழில் மற்றும் கனிய அபிவிருத்தியை மேம்படுத்தல் (பாராளுமன்றச் சட்டத்தால் வரையறுக்கப்பட்டவை)
27. (குறிப்பிட்ட) வியாபாரக் கூட்டுத்தாபனங்கள்
28. கூட்டிணைக்கப்படாத சங்கங்கள் மற்றும் வியாபாரம்
29. விளையாட்டுத்துறையை ஊக்குவித்தலும் மேம்படுத்தலும்,
30. மாகாண அபிவிருத்திக்குட்பட்ட விடயங்களை ஒன்றினைத்து தாபனப்படுத்தல், முறைமைப்படுத்தல். மற்றும் சட்டப்படி ரத்துச் செய்தல், அனுமதிப்பத்திரக் கட்டணமும் வரி நியமித்தலும்,
31. மாகாண கடன்,
32. இப்பட்டியலில் குறிப்பிட்ட அம்சங்களுள் ஏதாவதொரு அம்சத்தின் காரணமாக பிரகடனங்களிற்கு எதிராக செய்யப்படும் குற்றம்
33. இந் நிரலில் உள்ள விடயங்கள் தொடர்பான கட்டணங்கள்
34. தேசிய மின்சார முறைமை தவிர்ந்த மின்னுற்பத்தியும் மேம்படுத்தலும் அத்துடன் அவ்வேலைத்தளங்களை பாதுகாத்தல் மற்றும் நிர்வகித்தல்,
35. பாராளுமன்றத்தினால் இயற்றப்படும் சட்டங்களினால் அல்லது சட்டங்களின் கீழ் அல்லது அனுமதிக்கப்பட்ட அளவுக்கு கடன் பெறுதல்,
36. வரிகள், கட்டணங்கள்
37. பாராளுமன்றத்தினால் உருவாக்கப்பட்ட சட்டங்களின் மூலம் அல்லது சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மாகாணத்திற்குட்பட்ட பிரதேசத்தை (சூழல்) பாதுகாத்தல். போன்றவை உள்ளடங்கும்.

மாகாண சபையின் நியதிச் சட்டங்கள் யாவற்றுக்கும் ஆளுநர் சம்மதம் அளிக்க வேண்டும். இவ்வளவும் கடந்தாலும் மாகாண சபைக்கு என்று தனியான சட்ட வரைஞர் திணைக்களம் கிடையாது. அதற்கு மத்தியையே நம்பி இருக்க வேண்டும்.

ஏற்கனவே மத்திய சட்ட வரைஞர் திணைக்களம் உள்ள பணிச்சுமையில் மாகாண சட்டங்களை வரைதல் நிச்சயம் தாமதத்திலும் தாமதமாக இடம்பெறக்கூடிதொன்று. இதுவே இப் போது நடை முறையில் இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. இக் கட்டுரையைத் தொடர்ந்து வாசிக்கும்போது உங்களுக்கு அது தெளிவாக விளங்கும்.

### ஒத்தியங்கும் / ஒருங்கிணைந்த பட்டியலிலிருந்து (நிரல் III) மாகாண சபைக்கு கிடைக்கும் அதிகாரங்கள்

13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் ஒத்தியங்கும் பட்டியலில் 36 விடயங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவை மத்திய அரசுடனிணைந்து அனுபவிக்கவும், செயற்படுத்தவும், பிரகடனங்களை உருவாக்குவதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒத்தியங்கும் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள விடயங்களின் சாராம்சம் பின்வருமாறு - 1) திட்டமிடல், 2) கல்வி, 3) கல்விச் சேவை, 4) உயர் கல்வி, 5) தேசிய வீடமைப்பும் நிர்மாணமும், 6) சொத்துக்களை சுவீகரித்தலும் பலவந்தமாகப் பெறுதலும், 7) சமூக சேவைகள் மற்றும் புனரமைப்பு, 8) விவசாயமும், கமத்தொழில்சேவைகளும், 9) சுகாதார திட்டம், 10) பிறப்புச் சான்றிதல், திருமணம் மற்றும் மரணங்களைப் பதிதல்,

11) நகரங்களை மற்றும் கிராமங்களை மீளப் பெயரிடல், 12) மாகாணத்தினுள் தனியார் லொத்தர்கள் 13) விழாக்கள் மற்றும் காட்சிகள் (exhibition), 14) உணவு முத்திரை மற்றும் உணவு களஞ்சியப்படுத்தல், 15) கூட்டுறவு, கூட்டுறவு வங்கி, 16) நில அளவைகள், ஆய்வுகள்,17) நீர்பாசனம், 18) காடு வளர்ப்பு வனஜீவராசிகள் 19) கடற்தொழில் நடவடிக்கைகள், 20) விலங்கு பராமரித்தல், 21) தொழில் வாய்ப்பு, 22) உல்லாசப் பிரயாணத்துறை, 23) வியாபாரம் மற்றும் வர்த்தகம், 24) தினசரிப் பத்திரிகை, புத்தக சஞ்சிகைகளை அச்சிடுதல்,

25) இப்பட்டியலில் குறிப்பிட்ட அம்சங்களுள் ஏதாவதொரு அம்சத்தின் காரணமாக பிரகடனங்களிற்கு எதிராக செய்யப்படும் குற்றம் 26) இந் நிரலில் உள்ள விடயங்கள்தொடர்பான கட்டணங்கள், 27) தருமங்கள், அறக்கொடைகள், 28) விலைக்கட்டுபாடு, 29) இப்பட்டியலில் அல்லது மாகாணசபைப் பட்டியலில் விடயங்கள் சம்பந்தமான விசாரணைகள், 30) உணவுக்கலப்படம், 31) ஔதடங்களும் நஞ்சுகளும், 32) மாகாணத்தினுள் மின்னிணைப்பு, 33) சுற்றாடற் பாதுகாப்பு, 34)தொல்பொருள், புராதன விடயங்கள், 35) தொற்றுநோய்கள், தொடு நோய்கள், 36) யாத்திரைகள் ஆகும்.

### மாகாணசபைகள் நிரலில் இடம்பெறும் விடயங்கள்

மாகாணசபைகள் நிரலில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பாக பாராளுமன்றம் சட்டவாக்கம் செய்ய அதிகாரம் பெற்றுள்ளது. மாகாணசபைகள் இணங்கினால் சகல மாகாணசபைகளின் அனுமதியுடன் சட்டமாக்கலாம்.

ஒரு மாகாணசபையோ அல்லது பல மாகாண சபைகளோ இணங்காவிட்டால் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையுடன் சட்டமாக்கிக் கொள்ளலாம். ஏதேனும் ஒரு மாகாணசபை தனக்குரிய விடயம் தொடர்பாக சட்டவாக்கம் செய்யுமாறு பாராளுமன்றை வேண்டி நின்றால் அம் மாகாணசபைக்கு மட்டும் செல்லுபடியாகும் சட்டவாக்கம் செய்வதற்கு மாகாணசபைச் சட்டம் அனுமதியளிக்கின்றது.

மேலும் ஒருங்கிய நிரலில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பாக இரு பகுதியினரும் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டாலும் நியதிச் சட்டங்களும் ஏனைய சட்டங்களும் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பாராளுமன்றம் மாகாண சபைகளையும் மாகாண சபைகள் பாராளுமன்றத்தையும் கலந்தாலோசிக்க வேண்டும். இதில் பாராளுமன்றத்தின் பலமே மேலோங்கிக் காணப்படுவது ஒரு பெரும் சவாலாகக் காணப்படுகின்றது.

நியதிச்சட்டங்களை மாகாணசபைகளில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் மாகாணசபைகள் சட்டமா அதிபரைக் கலந்தாலோசிக்க வேண்டும். நியதிச்சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் இறுதி அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதன் பின்னரே அவை நடைமுறைக்கு வருகின்றன.

ஒரு குறிப்பிட்ட நியதிச்சட்டமூலம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் அதன் யாப்புறு தன்மையைத் தீர்மானிப்பதற்கு உயர் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்துமாறு கோரி அதனை ஜனாதிபதிக்கு அனுப்பும் அதிகாரம் ஆளுநருக்கு உண்டு. அந்த நியதிச்சட்டம் யாப்புக்கு இயைபானதாகும் என்று உயர் நீதிமன்றம் முடிவு செய்தால் மட்டுமே ஆளுநர் அதற்கு இறுதி அங்கீகாரம் வழங்க முடியும்.

பொதுமக்கள் பாதுகாப்புச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் மாகாண ஆளுநர்கள் நிறைவேற்று அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் விதம் பற்றி ஜனாதிபதி கட்டளைகளை பிறப்பிக்கலாம். அவற்றின்படியே ஆளுநர்கள் செயற்பட வேண்டும் என்பதும் மாகாணசபைகள் எதிர்நோக்கும் பாரிய சவாலாகும்.

முதலாம் மற்றும் மூன்றாம் நிரல்களில் உள்ள குறைபாடுகள் மற்றும் தலையீடுகள் பற்றி பல சட்டவல்லுநர்கள் பல இடங்களில் சுட்டிக் காட்டியது குறிப்பிடத் தக்கதாகும்.

ஒருங்கிணை நிரல் தொடர்பில் மத்திய பாராளுமன்றம் இயற்றும் சட்டம் மாகாண சபை சட்டத்திலும் மீயுயர்வானது. இதன் காரணமாக நடைமுறையில் ஒருங்கிணை நிரலும் மத்திய அரசாங்கத்திற்குரியதே. மேலும் இந்நிரல்களுள் ஏதேனும் விடயம் ஒதுக்கப்படாதவிடத்து அவ் விடயமும் மத்திய அரசின் நிரலுக்குட்பட்ட விடயமாகவே கருத வேண்டும் என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய கொள்கை உருவாக்கம் என்ற பெயரில் எவ்விடயம் தொடர்பிலும் (மாகாண சபை நிரல் விடயங்கள் உட்பட) மத்திய பாராளுமன்றம் சட்டமியற்றலாம்.

மாகாண சபை நிரலில் உள்ள எவ்விடயம் தொடர்பிலும் பாராளுமன்றம் 2/3 பெரும் பான்மையுடன் சட்டமியற்றலாம். அவசர கால சட்டமொன்றின் மூலமாக மாகாண சபை நிரலில் உள்ள எவ்விடயம் தொடர்பிலும் சட்டமியற்றலாம் மாகாணசபைக் சட்டமொன்றை வலிதற்றதாக்கலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுமந்திரன்...

வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிலிருந்து பல்வேறு காலகட்டங்களில் வெளியேறியவர்கள் மீண்டும் இணைய வேண்டும் என புன்முறுவலோடு சுமந்திரன் அழைப்பு விடுத்திருக்கிறார். அவருக்கு நாங்களும் புன்முறுவலோடு பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைத் தக்கவைக்க வேண்டும் என்ற அடிப்படையில் தமிழரசுக் கட்சியோடு இணைந்து கூட்டாகச் செயற்பட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தயாராக உள்ளது.

ஆனால் யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு ஆகிய தேர்தல் மாவட்டங்களில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதில் கொள்கை ரீதியாகவும், கடந்த கால அனுபவ ரீதியாகவும் பல மனஸ்தாபங்கள் உள்ளன.

எதற்காக இணையுமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது? தமிழ்த் தேசியத்தை சிங்களத் தேசியத்துடன் சமரசம் செய்து வைப்பதற்காகவா? அல்லது இருக்கின்ற பதவிக் கதிரைகளைப் பறிபோகவிடாமல் தக்கவைப்பதற்காகவா? அல்லது கடந்தகாலம் போல் ஆட்சியாளர்களுடன் மறைமுக சமரசம் செய்வதற்கா? என்ற கேள்விகளை எழுப்ப வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

ஒற்றுமை என்பது கொள்கையுடன், குறிக்கோளுடன் இருக்கவேண்டுமானால், தமிழரசுக் கட்சியில் ஆதிக்கம் செலுத்துக்கின்ற சுமந்திரன் தலைமையிலான அணியுடன் நாங்கள் ஒருபோதும் ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது, என்பதே தமிழ்த் தேசியக் கட்சியின் முடிவு ஆகும்.

முதலிலே தமிழரசுக் கட்சிக்குள் ஒற்றுமைப்பட முடியாதவர்கள் ஒற்றுமைக்கான அழைப்பை புன்முறுவலோடு விடுப்பது ஒட்டுமொத்தத் தமிழர்களையும் ஏமாற்றும் செயலாகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியோடு இணைந்து வீட்டுச் சின்னத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் போட்டியிடுவதா? இல்லையா? என்பது குறித்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி நாளை செவ்வாய்க்கிழமை கூடி ஆராயவுள்ளோம். அதில் தமிழ்த் தேசியக் கட்சியின் முடிவை உறுதியாகத் தெரிவிப்போம் எனத் தெரிவித்தார். (ந-7,33)

## பொதுக்கட்டமைப்...

பாக அனைவரும் ஒன்றிணையும் கோரிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகள் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலை ஓரணியில் எதிர்கொள்ள வேண்டும் என்பது எனது விருப்பம்.

தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஒரே நிலைப்பாட்டில் பயணிக்கின்ற ஏனைய தமிழ்க் கட்சிகள் தமிழ்ப் பொதுக் கட்டமைப்பாக ஒன்றிணைந்து செயற்படுகின்றன.

தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் தேர்தலில் போட்டியிடும் கோரிக்கையை முன்வைத்திருக்கும் நிலையில் உடனடியாக அதற்கு சம்மதம் தெரிவிக்க முடியாது.

ஏனெனில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பாக நாங்கள் பயணித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் குறித்த விடயம் தொடர்பில் சக தமிழ்க் கட்சித் தலைவர்களுடன் பேசி இறுதி முடிவை தெரிவிப்போம் என அவர் மேலும் கூறினார். (ந-7)

## பாதுகாப்புக்...

செயலாளர் தலைமையில் இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகப் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

தற்போது பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள பிரமுகர்களுக்கான பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

## தேர்தலுக்கான...

செயலகத்தில் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான ஆரம்பக்கட்ட செயற்பாடுகள் தொடர்பிலான இரு கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன.

மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதி மாவட்டச் செயலாளர்களின் பங்குபற்றலுடன் முதலாவது கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் இதில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க கலந்து கொண்டார்.

இதேவேளை, மாவட்டத் தேர்தல் அதிகாரிகள், உதவி ஆணையாளர்கள், பிரதி தேர்தல்கள் ஆணையாளர்களுடனும் தேர்தல் ஆணைக்குழு கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## வெதுப்பக...

கோதுமை மாவின் விலையில் மாற்றம் ஏற்பட்டால் மாத்திரமே வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விலைகள் திருத்தப்படும் என அதன் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார். (ந-7)

## யாழ்.சிறைச்...

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார மேலதிக விசாரணைகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்பிரகாரம் தலைமைப் பொலிஸ் பரிசோதகர் சாம்லி பலிஹேன, யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ் பரிசோதகர் இந்திக்க அபேகுணசேகர ஆகியோரின் தலைமையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ந-7)

## திறந்...

இது தொடர்பில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் பரிந்துரைக்கமைய மேற்படி தீர்மானத்தைக் கல்வி அமைச்சு எடுத்துள்ளது. (ந-7)

## தமி...

முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இதேவேளை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் பொருட்டு இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ந-7)

## ஒற்றுமைப்பட...

கைத் தமிழரசுக் கட்சி அண்மையில் அழைப்பு விடுத்துள்ளது.

இருந்தும் அந்த அழைப்பைச் சாதகமாகப் பரிசீலிப்பதற்கு ஏனைய தமிழ்க் கட்சிகள் தயாராக இல்லை.

இந்நிலையில் எதிர்வரும் பொதுத் தேர்தலின்போது வடக்குக் கிழக்கில் புதிய அணிகள் களமிறங்கக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளதென்றும் அரசியல் நோக்கர்கள் கருத்துரைத்துள்ளனர். (ந-7)

## பாராளுமன்றத்...

ஆயர் இல்ல மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

இக்கலந்துரையாடலிலேயே குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் பொதுச் சின்னமாகிய சங்குச் சின்னத்தினை பாராளுமன்றத் தேர்தலுக்காகப் பயன்படுத்துவதனை தமிழ்ப் பொதுக்கட்டமைப்புக்குள் உள்ள கட்சிகள் தவிர்க்குமாறும் கோரப்பட்டுள்ளது. (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2024.09.29
சீட்டிழுப்பு இலக்கம் 5610
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 6 3 9 4 8 2
அத சம்பத X 9 4 8 2
சீட்டிழுப்பு இலக்கம் 185

தன நிதானய
திகதி - 2024.09.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1640
P 24 30 32 54 P
Double Chance 73456

மெகா பவர்
திகதி 29/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1958
S 23 08 18 30 37
Double Chance 87275

லக்கி 7 VIP
திகதி 2024.09.29
சீட்டிழுப்பு இலக்கம் 0436
Z 9 7 0 9 5 4 Z

கோவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3852
சீட்டிழுப்பு திகதி 29.09.2024
F 02 18 39 67
F 85774

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.29
சீட்டிழுப்பு இலக்கம் 919
கடகம் 10 36 52 58 கடகம்
53660 06

உத்தியோகபூர்வ முடிவுகள்
29.09.2024 வெற்றி வாரம் 318 வர்ணம் பழுப்பு
ஆங்கில எழுத்து K மற்றும் வெற்றி இலக்கம் 9 3 2 9 2 9
31946
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,856,960.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2584 வர்ணம் ஆரஞ்சு நிறம்
சீட்டிழுப்பு திகதி 29.09.2024 தினம் ஞாயிறு
28 29 32 58 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,222,934.40

சனிதா
திகதி 2024.09.29 வெற்றி வாரம் 4745
07 13 37 58 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,419,194.80
07116

சசிரி
வெற்றி வாரம் 534
சீட்டிழுப்பு திகதி 2024.09.29
கபிலம்
வெற்றி இலக்கங்கள் 02 04 39
06
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,329,960/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4296 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.09.29 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 21 26 37 49 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,396,687.60
167071

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 04 04 25 46 75
1760 மஞ்சள் 29.09.2024 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 547,519,019.00

ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2410
சீட்டிழுப்பு திகதி : 2024.09.29
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,454,229.60
02 07 38 71 W
827934


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துக்கள்



## திருமதி கௌரி யோகேஸ்வரன்

ஆசிரியப் பணிதனை அர்ப்பணிப்போடு ஆற்றி
ஆற்றல்மிகு மாணவச் செல்வங்களை
அன்னையாய் அரவணைத்து அறிவூட்டி,
ஆன தேவைகள் அறிந்து அவை
அனைத்தும் நிறைவேற்றி
மாணவச் செல்வங்கள் மனம் குளிர
மகிழ்ந்து பணி செய்த பெருந்தகையே!
அகவை அறுபது கண்டீர்.
அலங்காரக் கந்தன் அருளால்
நீடூழி வாழ்க வாழ்க!..

Best Wishes

வாழ்த்துவோர் :
இணைந்து பணியாற்றிய அதிபர், ஆசிரியர்.

(C-1300)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 - 02 - 1948 | 28 - 09 - 2024 |

## ஞானேஸ்வரன் உமாராணி

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட உமாராணி ஞானேஸ்வரன் அவர்கள் 28.09.2024 சனிக்கிழமை இரவு 9.00 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - இந்திராணி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - தையல்நாயகி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஞானேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற றகுநாதன் மற்றும் ஜெயதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்றவர்களான பாக்கியவதி மற்றும் சிவபாதசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும் நரேந்திரம்(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - யாழ். மாநகரசபை), சர்வேஸ்வரன்(மின்சார சபை ஊழியர் - களஞ்சியசாலை, சுன்னாகம்), சக்திதரன்( கொ/இந்துக்கல்லூரி - பௌதிகவியல் ஆசிரியர்) ஆகியோரினது அன்புத் தாயாரும் சுபா, உமா, தர்மிகா ஆகியோர்களின் மாமியாரும் தேவனா, அக்ஷனா, அக்ஷயா, அக்ஷரன் மற்றும் ரினுஷ்கா ஆகியோரின் பேர்த்தியும் ரபோனி, மங்களரூபிணி, ஜெயசக்தி ஆகியோரின் சின்ன மாமியும் உருத்திரா மற்றும் சிவப்பிரியா ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2024) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் சுதுமலை மத்தியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுதுமலை,
மானிப்பாய்.

நரேந்திரம் - 076 931 8661
சர்வேஸ்வரன் - 076 458 0600

தகவல்:
குடும்பத்தினர்

(2159)


# Techna
Technical Institute

A/L தொழினுட்பப்பிரிவு

077 170 3549 வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

# A/L 2026

03.10.2024(வியாழக்கிழமை) மாலை 3.30 மணிக்கு

- மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனிப்பு.
- தொடர்ச்சியாக 7 நாட்களும் வகுப்புக்கள்
- மாதாந்தப் பரீட்சை, அலகுப் பரீட்சை,
- தவணைப்பரீட்சைகள்
- களப்பயணங்களை மேற்கொள்ளல்
- அனுபவம்மிக்க ஆசிரியர்களின் வழிகாட்டல்.
- செயன்முறை பயிற்சி வகுப்புக்கள்
- பாடங்களுக்கான கையேடுகள் வழங்கப்படும்.

(2160)

## இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்பொழுது
9000/= ரூபாவிலிருந்தும்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப்
பயணச் சீட்டுக்கள்
42,500/= இலிருந்து விசேட விலையில்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

(387)


## நடமாடும் சேவை

சிறுவர் தினத்தையொட்டி இதுவரை பிறப்புச் சான்றிதழைப் பதிவு செய்யாத சிறுவர்களுக்காக நடமாடும் சேவையானது நாளை செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் பி.ப 04.00 மணி வரை மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் யாழ். அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறுவர்களுக்கான பிறப்புச் சான்றிதழைப் பதிவு செய்வதற்காக உரிய ஆவணங்களுடன் வருகை தந்து பிறப்புச் சான்றிதழைப்பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(ந-7,33)


# TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை, யாழ்.

A/L தொழில்நுட்பப் பிரிவு

புதிய பிரிவு ஆரம்பம்
A/L 2026

- திகதி - 02.10.2024(புதன்கிழமை)
- நேரம் - மாலை 3.30 மணி

தொடர்புகளுக்கு:
077 017 5346

(C-1298)

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை
பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள
நிரந்தரகுடியுரிமையுடனான 15'000
Care Giver வாய்ப்புக்களுக்கான
சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன்
Care Giver கற்கை நெறி மற்றும்
Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)



CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-1295)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## V2 VISA SERVICES
கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1295)

# காணி விற்பனைக்கு

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் இருந்து 100m தூரத்தில் 14 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.

077 836 3050
075 889 5625

2 பரப்பாகவும்
3 பரப்பாகவும் பிரித்தும்
கொடுக்கப்படும்.

(2141)

# காணி விற்பனைக்கு

குஞ்சர் கடைக்கு அருகில் யாழ்ப்பாணம்,
பருத்தித்துறை வீதியுடன் 4 ¼ பரப்புக் காணி
விற்பனைக்குள்ளது.(தரகர்கள் தேவையில்லை)

076 196 3237, 076 749 5707
Whatsapp: + 4477 3778 3402

(2158)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.